Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-19 | 04-08-2005 | வியாழக்கிழமை | ஓசை-167


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

# செப்-1 மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வு

# கிளி.யில் பேரெழுச்சியுடன் இடம்பெற ஏற்பாடு

## முன்னோடிக் கலந்துரையாடல்கள் நேற்று ஆரம்பம்


(அலுவலக செய்தியாளர்)

***கிளிநொச்சியில் மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் நாள் இடம்பெறவுள்ளது. வவுனியாவில் இடம்பெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் வலியுறுத்தி கிளிநொச்சியில் மாவட்ட ரீதியாக இம் மக்கள் எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.***

இந் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி அரச சார் பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் மக்கள் எழுச்சி நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுச் செயலாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி எழுச்சிநாள் தொடர்பான ஏற்பாடுகளில் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கும் பணியாளர்களுக்குமான கலந்துரையாடல் நடைபெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)



## 2005 இல் சனாதிபதித்தேர்தல்; உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் 2005 ஆம் ஆண்டு நடைபெறவேண்டும் என்ற உத்தரவை தேர்தல் ஆணையாளருக்கு விடுக்கவேண்டும் எனக்கோரி ஜாதிக ஹெல உறுமய நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளது.

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்த இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி இரண்டாவது முறையாக சந்திரிகா சனாதிபதியாகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை எதிர்பார்க்கும் நிலை உருவாகியுள்ளது

### தேர்தல் ஆணையாளர் கருத்து

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த சனாதிபதித்தேர்தல் நடைபெறும் வருடம் குறித்து உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரி இருப்பதாக தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் ஆகவே உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் வரும்வரை அனைவரும் அதனை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை தேர்தல் ஆணையாளர் சனாதிபதித்தேர்தல் தினத்தை அறிவிப்பது தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் விளக்கிக் கூறியுள்ளார்.

சனாதிபதித் தேர்தல் தொடர்பாக பிரதானமான இரண்டு கொள்கைகள் உள்ளன. இந் நாட்டில் பிரதான அரசியல் கட்சிகள் தேவையான பொழுது எதிர்ப்புக் கொள்கைகளைப் பிரயோகிக்கின்றன. இன்றும் அவ்வாறே உள்ளது. எந்தக் கொள்கை இருந்தாலும் சட்டபூர்வமான விடயங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் செய்தியுடன் விதார் கிளிநொச்சி வருகை

### - நோர்வே தூதரகம் தகவல்

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், சனாதிபதியின் விசேடசெய்தியுடன் நாளை வன்னி செல்வார் என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்று கொழும்பு வரும் ஹெல்கேசன் இன்றைய தினம் மாலையே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசுவார். இந்தச் சந்திப்பில் புலிகளுக்கும் கடந்த அரசாங்கத்துக்குமிடையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராணுவ அதிகாரிகளிடம் சிறிலங்கா இராணுவ இரகசியங்கள்!

### -நாட்டுக்கு ஆபத்தென்கிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினருக்கு பயிற்சியளிப்பதற்காக அண்மையில் சிறிலங்கா வந்த அமெரிக்க இராணுவத்தினர் எமது இராணுவத்தினரின் உள்த்தகவல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் முகாம்கள் குறித்து இராணுவத்தினர் அறிந்து வைத்துள்ள தகவல்கள் அனைத்தையும் கணனியில் பதிவு செய்து கொண்டு சென்றுவிட்டனர்.

இது மிகவும் பயங்கரமான நிலை. இவையனைத்தையும் தெரிந்து கொண்டும் எமது தலைவர்கள் மௌனம் சாதித்து வருகின்றனர் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத்தலைவரான விமல் வீரவன்ச காலியில் நடைபெற்ற அதன் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறியுள்ளார். அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது;

எமது நாட்டின் அரசியல் நெருக்கடிகள் புதிய புதிய மாற்றங்களுடன் அதிகரித்துச் செல்கின்றன. இந்த நெருக்கடிகள் ஒரு நேரம் ஒரே அளவில் இருக்கிறது. மறுநேரம் அதிகரித்துச் செல்கிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆழிப்பேரலை நிவாரண சபை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் விடுதிப்பகுதியில் இருந்து தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் 20 வயதான பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு இந்தப்பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு போர்நிறுத்த விதிகள் பேணப்பட வேண்டும்

### - போ.நி.க குழுவிடம் ஞானம் வலியுறுத்து

(செட்டிகுளம்)

அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு போராளியினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மாறாக மாற்று ஆயுதக் குழுக்களிடம் இருக்கும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனவும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் நேற்று வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளை நேற்றுப்பிற்பகல் வவுனியா மாவட்ட அரசியல்துறை காரியாலயத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் வவுனியாவின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டதாகவும், அத்துடன் வவுனியாவில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் பாதுகாப்பான பயணம்; புலிகளின் பதில் கிடைத்தது

### - போ.நி.கண்காணிப்புக்குழு அறிவிப்பு

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளினூடான புலிகளின் பாதுகாப்பான பயணம் தொடர்பாக கடந்த 25ஆம் திகதி அரச சமாதானச்செயலகம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினூடாக புலிகளுக்கு அனுப்பிய மேலதிக யோசனைக்கான பதில் விடுதலைப் புலிகளிடமிருந்து நேற்றுமுன்தினம் நண்பகல் கண்காணிப் புக் குழுவுக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கண்காணிப்புக்குழுவுக்கும் அரச சமாதானச் செயலகத்திற்குமிடையே வழமையாக நடைபெறும் சந்திப்பு நேற்று முன்தினம் காலை நடைபெற்று முடிந்த சில நிமிட நேரத்தில் புலிகளின் இந்தப் பதில் தங்களுக்குக் கிடைத்ததாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் தெரிவித்தார். புலிகளின் பதில் கடிதம் கிடைத்ததை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கடை விற்பனைக்கு

கிளிநொச்சி பொதுவைத்திய சாலைக்கும், கச்சேரிக்கும் இடையில் கிணறு மலசலகூட வசதியுடன் கடை விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- வன்னியன் பல்பொருள் வாணிபம், கச்சேரி முன்பாக, (பிரபா) கிளிநொசசி. T.P:021-2285776 (6506)

## தவறிவிட்டது

02.08.2005 அன்று முறிகண்டிக்கும் கிளிநொச்சி நகருக்கும் இடையில் கற்குலேற்ரர் பொருத்தப்பட்ட கறுப்பு தினக்குறிப்பேடு (டயறி) தவறிவிட்டது. இதனைக்கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இளவேனில் வாணிபம், கிளிநொச்சி. (தொலைபேசி இலக்கம் 021-2285895) அல்லது ஈழநாதம் பணிமனை. என்னும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும். ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6517)

## முன்பள்ளிகளுக்கு நிரந்தர கட்டடம்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 168 முன்பள்ளிகள் இயங்கி வருகின்ற பொழுதிலும் அவற்றில் 25 முன்பள்ளிகள் மட்டுமே நிரந்தர கட்டடங்களில் இயங்கிவருவதாக நேற்று முன்தினம் கிளி.மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற கல்விக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பெற்றது.

இதனை செவிமடுத்த அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவன தலைவர்களுடன் தொடர்பு கொண்டு முன்பள்ளிகளில் நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுமெனத் தெரிவித்தார். (சோ)

## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரும், கேள்விச்சபை தலைவரும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம் சமாசக்கட்டடம் புனரமைப்பிற்கு இக்ராட் நிறுவனத்தில் எம் 7 (தரம் எம் 07) பதிவு செய்யப்பட்ட உள்ளூர்கட்டட ஒப்பந்த காரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

மேற்கூறிய வேலைக்கு கேள்விகோருவோரிடமிருந்து மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 மும் மீளளிப்பு வைப்புப் பணமாக 22158.00ரூபா செலுத்தி 20.08.2005ஆம் திகதிக்கு முன் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம், பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் அதேதினத்திலோ, அதற்கு முந்திய தினத்திலோ தலைவர், கேள்விச்சபை, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ இடலாம்.

கேள்விகள் 23.08.2005ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி கோருவோரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட புனர்வாழ்வுக் கிளையுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி. இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-12482)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 05 - 03 - 1947



உதிர்வு 06 - 07 - 2005

### அமரர் திரு-இராமநாதர்-நவரட்ணம்

(கிராம அலுவலர், கரும்புள்ளியான்,மாந்தை கிழக்கு)

05.08.2005 நாளை(வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறுகின்ற, எமது அன்புத் தந்தையாரின் சிவப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், ஆத்மா சாந்தி நிகழ்விலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை ஒரு தனிப்பட்ட அழைப்பாக ஏற்று குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல-469, திருநகர், யோகபுரம், மல்லாவி. (6012)

தகவல்:- பிள்ளைகள்.

## முல்லை-தொழில் நுட்ப கல்லூரி - முல்லைத்தீவு

## பதவி வெற்றிடம்

**எமது கல்லூரியில் 01~09~2005இல் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர், உதவிப்போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. தொழில் தகைமை:**

**குறிப்பிட்ட பதவிகளுக்குரிய பயிற்சிநெறி சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது 6 மாத கால பயிற்சியும், வெளிக்களப்பயிற்சியும் நிறைவு செய்த சான்றிதழ்களுடன், கற்பித்தல் ஆளுமையும், அனுபவமும் உடையவராக விருத்தல் வேண்டும்.**

**02. கல்வித்தகைமை:**

குறைந்தது க.பொ.த.சாதாரணம் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**03. வயது:** 20 - 45 வருடம்

**பயிற்சி நெறிகள்:**

01. மின் ஒட்டு (**Welding**)
02. நீர்குழாய் பொருத்தல் (**Plumbing**)

நேர்முகத் தேர்வு 20-08-2005 **மு.ப. 9.30**

03. மேசன் தொழில் பயிற்சி (**Mesonery**)
04. மரவேலை தொழில் பயிற்சி (**Carpentary**)

நேர்முகத் தேர்வு 21-08-2005 **மு.ப. 9.30**

**விண்ணப்பங்கள் யாவும் 16.08.2005 இற்கு முன் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ, அதிபர் தொழில்நுட்பக் கல்லூரி முல்லைத்தீவு என்ற முகவரிக்கு கிடைத்தல்வேண்டும், விண்ணப்பித்தவர்கள் நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட திகதியில் சகல ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் நேரில் சமுகமளித்தல் வேண்டும். அழைப்பு அனுப்பப்படமாட்டாது.**

திகதி:03.08.2005

**க. வைரமுத்து**
**அதிபர்.**

(சி-12483)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் – 2005

கரைதுறைப்பற்று பிரதேசசபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும், உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும், ஒப்பந்த வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடம் இருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. 2005.08.04ஆம் திகதி தொடக்கம் 2005.08.12ஆம் திகதி பகல் 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 2005.08.12ஆம் திகதி அன்று பிற்பகல் 1.00 மணிவரை சேர்க்கப்படலாம். அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் பரிசீலிக்கப்படும் கேள்வியை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் சமூகமளித்திருக்கலாம். கேள்விகள் இணைப்படிவத்தில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர் கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும் அதேநாளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காகித உறையின் மேல் முலையில் வேலையின் பெயரை எழுதி கேள்விப்பத்திரம் 2005 எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை பிரதேசசபையில் அறிந்துகொள்ளலாம்.

| இல. வேலையின் பெயர். | கேள்வி வைப்புப் பணம் மீளளிக் கப்படக் கூடியது. | கேள்வி பத்திரப் பணம் மீளளிக் கப்படாதது. | வற்வரி பற்றி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம். |
|---|---|---|---|
| 01. தங்கபுரம் குமுழமுனை வீதி, புனரமைத்தல். | 4250/- | 250/- | |
| 02. கீச்சிராபுரம் உள்வீதி, புனரமைத்தல். | 1250/- | 250/- | |
| 03. முள்ளியவளை சுடலை புனரமைத்தல். | 2250/- | 250/- | |

(இ.கிருஷ்ணபிள்ளை)
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி-12481)

# ஐ.நா வுக்கான அமெரிக்க தூதர் நியமனம்
# சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தினார் புஷ்

(வோஷிங்டன்)

**பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமல் ஐ.நா வுக்கான அமெரிக்கத் தூதராக ஜான் ஆர் போல்டனை அதிபர் புஷ் நியமித்ததாகவும் இதற்காக அரசியல் சட்டத்தில் தனக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தை அதிரடியாகப் பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

அமெரிக்காவின் சார்பில் தூதர்களை நியமிக்க அந்நாட்டு பாராளுமன்றில் அதிபர் அனுமதி பெற வேண்டும். அவசரநிலை அல்லது முக்கியம் என்று கருதினால் பாராளுமன்ற அனுமதியைப் பெறாமல் நேரடியாக நியமிக்கும் அதிகாரம் அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த அதிகாரத்தை அதிபர்கள் பயன்படுத்துவது அபூர்வம்.

ஐ.நா வுக்கான அமெரிக்கத் தூதரை நியமிக்க அதிபர் புஷ் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார். மிகவும் சர்ச்சைக்குரிய நபராகக் கருதப்படும் ஜான் ஆர். போல்டனை இப்பதவிக்கு புஷ் நியமித்தார் "ஐ.நா வில் முக்கிய விவாதங்கள் நடக்க உள்ள நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த இப்பதவியை நீண்டகாலம் காலியாக வைத்திருக்க முடியாது. போல்டன் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. ஆகவே அவரை தூதராக நியமிக்க இன்று என் அதிகாரத்தைப் பயன்படுத்தினேன்" என்று வெள்ளை மாளிகையில் அளித்த பேட்டியில் புஷ் கூறினார்.

போல்டனை தூதராக நியமிக்க ஜனநாயக கட்சி கடுமையாக எதிர்க்கிறது 'போல்டன் அதிரடியாக செயற்படக் கூடியவர். அவரைப் போன்ற ஒருவரை இது போன்ற முக்கிய பதவியில் நியமிக்கக் கூடாது' என்று ஏற்கனவே அது கருத்து தெரிவித்து வந்தது. வெளியுறவு அமைச்சகத்தின் கீழ் செயற்படும் ஆயுத கட்டுப்பாட்டுத் துறையில் போல்டன் தற்போது பணியாற்றி வருகிறார்.



## அமெரிக்கா எச்சரிக்கை

அமெரிக்க மக்கள் மீதும், அமெரிக்க நிலைகள் மீதும் தாக்குதல் தொடர்ந்து இடம் பெறலாமென்று அமெரிக்கா வெளிநாடுகளில் வாழும் தனது மக்களுக்கு எச்சரித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு யூலை மாதம் லண்டன் ரயில் குண்டுவெடிப்பும், 2004 மெயிட் குண்டுவெடிப்பும் தீவிரவாதிகள் போக்குவரத்து வசதிகளை இலக்காகக் கொண்டு தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.


எனவே தனது மக்களை கவனமாக இருக்கும் படி வெளிநாடுகளில் வசிக்கும் அமெரிக்க மக்களை அமெரிக்கா கேட்டுள்ளது.

இதேவேளை செப்ரெம்பர் நடுப்பகுதியில் ஆப்கானிஸ்தானில் தேசிய ரீதியாக இடம் பெறவுள்ள தேர்தல்களைக் குழப்பும் நோக்குடன் அமெரிக்காவிற்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரவாதிகள் மேற்கொள்ளக் கூடும் எனவும் தெரிவித்துள்ளது.



**லண்டன் குண்டுவெடிப்புடன் தொடர்புள்ளவர் என நம்பப்படுபவரான ஹமிட் இசாக் அல்லது ஒஸ்மான் உசைன் என அழைக்கப்படும் நபரைப் பொலிசார் ரோம் நகரில் கைதுசெய்துள்ள நிலையில் அவரது நிழற் படத்தை ஏந்திநிற்கும் இத்தாலியப் பொலிசார் ஒருவர்.**

## கனடாவில் விமான விபத்து
## 309 பயணிகள் உயிர்பிழைத்தனர்



பிரான்சுக்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று டொராண்டோ விமான நிலையத்தில் தரை இறங்க முயன்ற போது மிக மோசமான வானிலை காரணமாக விபத்துக்குள்ளாகி தீப் பிடித்து எரிந்தது. எனினும் அதில் பயணித்த 309 பேர் உயிர் தப்பினர்.

சிறிது நேரத்தில் விமானம் முழுவதும் தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டது. பயணிகளும் சிப்பந்திகளும் கீழே குதித்து தப்பி ஓடிவிட்டதால் யாரும் உயிரிழக்கவில்லை.

ஆனால் ஏராளமான பயணிகள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உயர்நிலை நீதிபதி ஒருவர் ஈரானில் சுட்டுக்கொலை

ஈரானின் உயர்நிலை நீதிபதி ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பல முக்கிய வழக்குகளை விசாரணை செய்துவரும் ஹசன் மொகதாஸ் என்ற நீதிபதியே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

இவர் கொல்லப்பட்டமையின் பின்னணி வெளிவராதபோதும் கொலை தொடர்பிலான விசாரணைகள் தொடர்வதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.


ஈரானில் அரசியல் கைதியாக உள்ள ஊடகவியலாளர் அக்பர் கன்ஜி தொடர்பான வழக்கையும் நீதிபதி ஹசன் மொகதாஸே விசாரணை செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 14 அமெரிக்க கடற்படையினர் பலி

ஈராக்கின் வடமேற்கில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 14 அமெரிக்கக் கடற்படையினர் பலியாகியுள்ளனர்.

அத்துடன் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் இந்தச் சம்பவத்தில் பலியானார்.

வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடிக்கவைக்கப்பட்ட போதே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



**கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட 30 வயதுடைய தமிழ் இளைஞர் பிரான்சிஸ் தேவராஜ் என்பவரும் இவருடன் இணைந்து மற்றும் மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கனடாவையும் அமெரிக்காவையும் இணைக்கும் 360 அடி நீளமுள்ள சுரங்கப் பாதை ஒன்றை அமைத்துள்ளார்கள். கொங்கிறீட்டால் இது கட்டுவதற்கு ஒரு வருடம் சென்றுள்ளதாகவும், சகல வசதிகளையும் இந்தச் சுரங்கப் பாதையில் இவர்கள் அமைத்துள்ளதாகவும் இதன் மார்க்கமாக ஆட்கடத்தல்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



**ஜப்பானின் ஹிரோசிமாவில் அணு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட 60 ஆவது வருடத்தைக் குறிக்கும் வகையில் நடைபெற்ற அணிவகுப்பில் ஈடுபட்ட பௌத்த துறவி.**

## தீவிரவாதிகளைக் கைதுசெய்ய முஸ்லிம் தலைவர்கள் உதவவேண்டும்

### ~பிரிட்டன் வேண்டுகோள்

(லண்டன்)

பிரிட்டனில் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் மத நல்லிணக்கத்தை மேம்படுத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். தீவிரவாதிகளைப் பிடிக்க உதவி செய்யுங்கள் என்று இஸ்லாமியத் தலைவர்களுக்குப் பிரிட்டன் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் கடந்த மாதம் எட்டு மற்றும் 21 ஆம் திகதிகளில் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். இது தொடர்பாக தீவிரவாதிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பலரிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது. லண்டன் குண்டு வெடிப்பை அடுத்து முஸ்லிம்கள், சீக்கியர்கள் மீதான தாக்குதல்களும் ஆங்காங்கே நடந்தன. மசூதி, குருத்வாரா போன்ற வழிபாட்டுத் தலங்களிலும் தாக்குதல் நடந்தது.

இந்நிலையில் பிரிட்டன் உள்துறை அமைச்சர் ஹஸல் பிளீர் கூறுகையில், பிரிட்டன் முழுக்க எட்டு இடங்களில் இஸ்லாமியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பிரிட்டனில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து அந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் மேலும் பிரிட்டனில் வேரூன்றி உள்ள தீவிர வாதிகளைப் பிடிக்க இஸ்லாமியத் தலைவர்கள் உதவ வேண்டும். அதன் மூலம் பிரிட்டனில் மத நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.



**தைவானில் நாட்டில் தாய்பேய் நகரில் சட்டத்திற்குப் புறம்பாக பயன்படுத்தப்பட்ட சீடி ரோம்களைப் புல்டோசர் மூலமாக அழிக்கின்றனர்**

## பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவரை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திருப்பி அனுப்பியது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் மவுலானா பஸ்லூர் ரெகமான் ஐக்கிய அரபு எமிரெட்ஸ்க்குள் நுழைய அந்த நாட்டு அரசு அனுமதி மறுத்துள்ளது. அவரை உடனடியாக தனி விமானத்திலும் திருப்பி அனுப்பியது.

பாகிஸ்தானிலுள்ள ஜமாத் உலமா இஸ்லாமிய கட்சித்தலைவரும், முத்தாஹிதா மஜ்லிஸ் அமல் எனப்படும் இஸ்லாமிய கூட்டணியின் பொதுச் செயலாளருமாக இருப்பவர் மவுலானா பஸ்லூர் ரெகமான். இவர் தலிபான் ஆதரவு மதகுரு ஆவார்.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவராகவும் இருக்கிறார். இவர் லிபியா நாட்டில் இருந்து சவுதிஅரேபியா செல்லும் வழியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.ஈ) நாட்டுக்குச் சென்றார்.

சவுதி அரேபியாவில் இன்று ஒரு மாநாடு நடக்கிறது. அதில் கலந்துகொள்வதற்காக அவர் சென்றிருந்தார். டுபாய் விமான நிலையத்தில் அவர் இறங்கியதும் அவருக்கு விசா மறுக்கப்பட்டது. அவர் விமான நிலையத்தில் உள்ள ஹோட்டலிலேயே இரண்டு நாட்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டார். நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப் படவில்லை.

அவருடைய பெயர் தடைசெய்யப்பட்டவர்கள் பட்டியலில் இருப்பதால் அவரை அனுமதிக்க முடியாது என்று கூறப்பட்டது.

நேற்று முன்தினம் அதிகாலை அவர், எமிரேட்ஸ் விமானத்தில் பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

## சவுதி அரேபிய மன்னர் இறுதிச்சடங்கு உலகத் தலைவர்கள் பலர் அஞ்சலி

(ரியாத்)

சவுதி அரேபிய மன்னர் பாத் உடல் அடக்கம் ரியாத் நகரில் நடந்தது. அவருக்கு உலக நாடுகளின் தலைவர்கள் சவுதி அரேபியா சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

நவீன சவுதி அரேபியாவை உருவாக்கிய மன்னர் அப்துல் அஜீசின் மகனான மன்னர் பாத் கடந்த 23 ஆண்டுகளாக சவுதியை ஆட்சி செய்து வந்தார். பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் வாழ்க்கையை நடத்திய இவர் கடந்த திங்கட்கிழமை காலமானார். இவரது இறுதிச் சடங்குகள் ரியாத் மசூதியில் நேற்று முன்தினம் நடந்தது. இறந்த மன்னருக்காக தொழுகையும் நடத்தப்பட்டது. அதன் பின் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அவரது உடல்அடக்கம் மிக எளிய முறையில் நடந்தது. அவரது கல்லறை மற்ற எல்லா முஸ்லிம்களையும் போல இருக்கும். மன்னர் என்பதால் எந்த வித்தியாசமும் இருக்காது.

மற்றைய முஸ்லிம் நாடுகளைப் போல ஒரு வாரம் 10 நாட்கள் என துக்கம் கடைபிடிக்கப்பட மாட்டாது. மன்னர் வகாபி மரபைச் சேர்ந்தவர் என்பதால் அதிகாரபூர்வமாக துக்கம் கடைபிடிக்கப்படமாட்டாது.

அல்லாவைத்தவிர வேறு கடவுள் இல்லை என்று பொறிக்கப்பட்ட கொடிகள் முழுக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

மன்னர் பாத்தின் இறுதிச் சடங்கில் உலகநாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர். இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ், பாகிஸ்தான் அதிபர் முஷாரப், சிரிய அதிபர் பஷர் அல் ஆசாத், செனகல் சனாதிபதி அப் துல்லாயே வாடே, ஆப்கான் சனாதிபதி கர்சாய் ஆகியோர் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

# இராணுவ சோதனை நிலையத்தில் முட்கம்பிச் சுருள்கள் பறிமுதல்!

## மட்டக்களப்பில் இராணுவம் அடாவடி

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட 400 முட்கம்பிச் சுருள்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.**

பாரஊர்தியில் கொண்டு செல்லப்பட்ட இந்தக் கம்பிச் சுருள்கள் மட்டக்களப்பு கறுத்தப் பாலத்திற்கு அருகே வைத்து பறிமுதல் செய்யப்பட்டன.

முட்கம்பிகள் தடைசெய்யப்பட்ட பொருட்கள் எனக் கூறி இராணுவத்தினர் அவற்றைத் தடுத்து வைத்துக்கொண்டு பாரஊர்தியையும், சாரதியையும் விடுவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்காக இவற்றைக் கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்டிருக்கலாமென இராணுவத்தினர் சந்தேகிக்கின்றனர்.

அம்பாறை புல்லுமலையில் வைத்து கடந்த மாதம் 240 கம்பிச் சுருள்கள் உட்பட பெருமளவு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## சேனைக்குடியிருப்பில் மின் அபாயம்

கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சேனைக்குடியிருப்பு கிராமம் மின்சார அபாயத்தின் உச்சக்கட்ட நிலையை அடைந்துள்ளது. சேனைக்குடியிருப்பிலுள்ள மின்சாரக் கம்பிகளில் மரங்கள் சாய்ந்துள்ளதால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இக்கிராமத்திலுள்ள வீதிகளிலும், பிரதான வீதிகளிலும் மின் கம்பிகளுக்கு மேலால் மரங்கள் வளர்ந்து சாய்ந்துள்ளன.

இது குறித்து பலமுறை மக்கள் மின்சாரசபைக்கு தெரிவித்தும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் இவ்வாறு அபாயம் ஏற்படுகின்ற நிலையுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து மக்களின் அபாய நிலையைப் போக்க வேண்டுமென இக்கிராம மக்கள் கேட்டுள்ளனர்.

## மணல் அகழ்விற்குத் தடை

சுற்றுச்சூழல் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு பன்னங்கண்டி ஆற்றுப் பகுதியில் மணல்அகழ்வு செய்வதை கரைச்சிப் பிரதேச சபை கடந்த திங்கட்கிழமை முதல் தடைசெய்துள்ளதாக அறிவித்துள்ளது.

பல காலமாக இப் பகுதியில் மணல் அகழ்வு நடைபெற்று வந்தது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் பல தடவைகள் மண் அகழ்வு தொடர்பாகவும் இப் பகுதியில் சூழல் மாசுபடுவது தொடர்பாகவும், கரைச்சிப் பிரதேச சபையினருடன் கலந்துரையாடிவந்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி கரைச்சிப் பிரதேச சபை பன்னங்கண்டி ஆற்றுப் பகுதியில் மணல் ஏற்றுவதை தடை செய்துள்ளதாக அறிவித்தல் பலகை போட்டுள்ளது. (46)

## கடற்படையினரின் மனிதக் கழிவுகள் கொட்டப்படுவதால் கோபாலபுரம் கடற்கரையில் மீனவர் தொழிலுக்குத் தடை

(திருகோணமலை)

நிலாவெளியில் அமைந்துள்ள கடற்படைத்தளத்திலிருந்து மனிதக் கழிவுப் பொருட்களை கோபாலபுரம் கடற்கரையை அண்டிய பகுதியில் கொட்டுவதால் அங்கு வாழும் மக்கள் சுகாதார சீர்கேட்டை எதிர்நோக்கி வருகின்றனர்.

அங்கு தொழில் செய்யும் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத இக்கட்டுக்கு ஆளாகி வருவதாகவும் இதுபற்றி குச்சவெளி பிரதேச சபை நிர் வாகத்திற்கும் பொதுச் சுகாதாரத் திணைக்களத்திற்கும் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. .

கோபாலபுரம் பிரதேசக் குடியிருப்பாளர்களும் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களும் இம்முறைப்பாட்டைச் செய்துள்ளனர். சுகாதார அதிகாரிகள் முறைப்பாட்டையடுத்து, பாதிப்புக்குள்ளான இடத்தைச் சென்று பார்வையிட்டதுடன் அது தொடர்பாக மேலிடத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. (25)

## சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஏழு மாதம் கடந்த நிலையிலும் அம்பாறை மாவட்டத்தில் 9346 பேர் அகதி முகாம்களில்

(அம்பாறை)

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஏழு மாதங்கள் கடந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் முகாம்களில் இன்னும் 9346பேர் அகதிகளாக உள்ளனர். கல்முனைக் கரையோரப் பிராந்திய மேலதிக அரசாங்க அதிபர் யூ.எல்.ஏ.அசீஸ் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையிலிருந்து இது தெரிய வந்துள்ளது. 12 அகதி முகாம்களில் 9346 பேர் இன்னும் இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்லமுடியாமல் வாழ்ந்து வருகின்றனர். பொத்துவிலில் நான்கு திருக்கோவிலில்-மூன்று , கல்முனையில் -இரண்டு அகதி முகாம்களும் மற்றும் கல்முனை காரைதீவு, நிந்தவூரில் உள்ள மூன்று அகதி முகாம்களும் தற்போது இயங்கி வருகின்றது.

முகாம்களிலுள்ள 9346 பேரில் ஆண்கள் 3793, பெண்கள் 3969, சிறுவர்கள் 1967பேர் ஆகும். பொத்துவில் பகுதியில் மட்டும் 3201பேரும், திருக்கோவில் பகுதியில் 4026 பேரும் கூடுதலாக உள்ளனர் இதேவேளை தமது சொந்த வீடுகளில் 36040பேர் மீளக் குடியமர்ந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தம் காரணமாக இவர்கள் சொந்த வீடுகளை விட்டு வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. திருக்கோவிலில் பகுதியில் 11123 பேரும், காரைதீவில் 5017 பேரும், அக்கரைப்பற்றில் 5876பேரும், சாய்ந்தமருதில் 5221 பேரும், கல்முனை (முஸ்லிம்) பிரிவில் 4969 பேரும் ஆலையடி வேம்பில் 2594 பேரும், அட்டாளைச் சேனையில் 240 பேரும் மீளக் குடியமந்துள்ளனர். மீளக்குடியேறிய 36040 பேரில் 12735 ஆண்களும், 12779 பெண்களும், 10526 சிறுவர்களும் அடங்குவர். இது இவ்வாறிருக்க, இடம் பெயர்ந்து உறவினர் வீடுகளில் இன்னும் 82284 பேர் வாழ்ந்து வருகின்றனர். இத்தொகை மிகவும் கூடுதலாக உள்ளது. கல்முனை (முஸ்லிம்) பிரிவில் 20728 பேரும் பொத்துவில் பிரிவில் 8070 பேரும் உள்ளனர்.

இப்படி வாழும் 82284 பேரில் 26815 ஆண்களும், 26269 பெண்களும், 21567 சிறுவர்களும் அடங்குவர். இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் இறந்தோர் எண்ணிக்கை 5890 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாயவனூரில் காட்டுயானையின் தொல்லையை கட்டுப்படுத்தக் கோரிக்கை

வட்டக்கச்சி மாயவனூர் ஆற்றுப் பகுதியில் தனியானை ஒன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக இப்பகுதிக்கு தனியாக வரும் யானை ஒன்று இப்பகுதியிலுள்ள தென்னந்தோப்பு மற்றும் வாழை, மரவள்ளி போன்றவற்றை அழித்து வருவது குறித்து இப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இப்பகுதியில் இந்த யானை பல ஏக்கர் இளம் தென்னை மரங்களை அழித்துள்ளதுடன் யானையின் அட்டகாசம் கூடி வருவதனால் இப்பகுதி மக்கள் பலகாலமாக பாடுபட்டு உற்பத்தி செய்து வந்த பயிர்கள் அழிக்கப்படுவதை தொடர்புடையவர்கள் கவனமெடுத்து கட்டுப் படுத்த வேண்டும் என மாயவனூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மன்னார் நகரில் சுவரொட்டிகள்

(மன்னார்)

மன்னார் நகரில் சிறிலங்கா அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தி சுவரொட்டிகள் பல்வேறு இடங்களிலும் இரவோடி இரவாக ஒட்டப்பட்டுள்ளது.

இந்தச் சுவரொட்டிகளில் பொதுக் கட்டமைப்பில் சிறிலங்கா அரசின் இரட்டை வேடம் குறித்தும், துரோகக் கும்பல்களுக்கு அரசு துணைப்போவது குறித்தும் உயர் பாதுகாப்பு வலயம், கடல் வலயம் தொடர்பாகவும், போரைத் தூண்டும் பேரினவாதிகள் பற்றியும் பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சுனாமியால் காயமடைந்தோருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பலதரப்பட்ட வேலைத் திட்டச் செயற்பாடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட சில பொதுமக்கள் காயங்களுக்குட்பட்டதையடுத்து அவர்கள் நடக்கமுடியாது பல சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பொறியியலாளர் சிவராசா கடந்த திங்கட்கிழமை வழங்கியுள்ளார்.

## சமகால அரசியல் கருத்தரங்கு

(விசுவமடு)

விசுவமடுப்பிரதேசத்தில் சமகால அரங்கியல் கருத்தரங்கு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

பிரதேச ரீதியில் மக்கள் செயலணி குழுத் தெரிவு இடம்பெற்று தற்போது கிராம ரீதியாக செயலணிக் குழுத் தெரிவுகள் இடம்பெறுவதுடன் சமகால அரசியல் கருத்தரங்குகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வ.பத்மநாதன், விசுவமடுப்பிரதேச மக்கள் செயலணிக்குழுத் தலைவர் சி.தணிகாசலம், செயலாளர் பாலசுந்தரம், கிராமசேவையாளர் செல்வி. விநாயகமூர்த்தி, விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் ஆகியோர் கலந்து கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். (46)

## திருமலை- மூதூருக்கு இடையே போக்குவரத்திற்கு கப்பல் வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை

(திருமலை)

திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையே பயணிகள் படகுச் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நான்கு மோட்டார்ப் படகுகளும் பழுதடைந்து விட்டன. இப்போது தனியார்ருக்குச் சொந்தமான சிறிய படகு ஒன்றே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. உடனடியாக திருகோணமலைக்கும், மூதூருக்கும் இடையே பயணிகள் போக்குவரத்துக்காக கப்பல் ஒன்றை சேவையிலீடுபடுத்துமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், துறைமுகங்கள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கின்றார்.

"துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சேருவில கப்பல் மற்றும் "மகாவலி தேவி", இயந்திரப்படகு, [illegible] பலநோக்குக் கூட்டுறவுச் [illegible]திற்குச் சொந்தமான "மாதுமை [illegible] திருமலை- மூதூர் பயணிகள் கடல் வழிப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டன. இவை அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாகப் பழுதடைந்து விட்டன. இப்போது 'ஆனந்தராணி" என்ற சிறிய இயந்திரப் படகு ஒன்று தான் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்றது.

"மூதூருக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கடல் வழிப் போக்குவரத்தைத் தினமும் சுமார் இரண்டாயிரம் பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் உல்லாசப் பயணிகளும் கடல் வழிப் பயணத்தையே மேற்கொண்டு வந்துள்ளனர். ஒரே ஒரு படகு மட்டுமே சேவையி லீடுபடுத்தப் படுவதால் பயணிகள் அடையும் இன்னல் கள் பல என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு அனுப்பிய அவசர வேண்டுகோளில் சுட்டிக் காட்டியுள்ளார். திருகோணமலையிலிருந்து மூதூருக்குத் தரை மார்க்கமாகச் சுமார் 70 மைல் பயணஞ் செய்ய வேண்டும். இப் பயணத்திற்குச் சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கு மேல் எடுக்கிறது. கடல் வழிப்பயணம் ஒரு மணிநேரமே எடுக்கிறது. கந்தளாய் அல்லை வீதியூடாகவே தரை வழிப் பயணம் மேற்கொள்ள வேண்டும். அவ்வீதி போக்குவரத் திற்கு உதவாத நிலையில் காணப் படுகின்றது என்றும் துரைரெட்ணசிங் கம் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எனவே கப்பல் ஒன்றை அனுப்பி திருகோணமலை - மூதூர் கடல் வழிப் பயணிகள் போக்குவரத்துச் சேவையை சிராக்குவதற்கு நடவடிக்கை எடுங்கள் " என்றும் துரைரெட்ணசிங்கம் கேட்டுள்ளார். கடிதத்தின் பிரதிகள் சனாதிபதி, பிரதமர், பிரதி அமைச்சர், அரச அதிபர் மற்றும் துறை முக அதிகார சபைத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## விழி மருத்துவ இதழ்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஓகஸ்ட் மாத சுகாதார மருத்துவ இதழான "விழி" இதழ் 59 வெளிவந்துள்ளது.

காச நோய் சிசுக்களில் மூளைச் சவ்வு அழற்சியை ஏற்படுத்தலாம் என்னும் தலைப்புச் செய்தியுடன், குறிக்கோளை அறிதல், நலன் காப்போம் தொடர் 23 சின்னமுத்தும், ஜேர்மன் சின்னமுத்தும், புகை மனித குலத்திற்குப் பகை மற்றும் பல சுகாதாரச் செய்திகளுடன் ஓகஸ்ட் மாத மருத்துவ இதழ் விழி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## லயன்ஸ் கழக அனுசரணையுடன் மன்னாரில் நுளம்பு வலை

(மன்னார்)

மன்னாரில் லயன்ஸ் கழக அனுசரணையுடன் நுளம்புத் தொல்லையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் சுகாதாரப் பரிசோதகர்களினால் இனங்காணப்பட்டு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் மன்னார் பெரியகடை, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மேற்கு வங்காலை, முருங்கன் போன்ற இடங்களிலுள்ள மக்களுக்கே நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன. (18)

# சமூக வேலைத்திட்டங்களை அமுல் செய்ய போதிய நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை!

## சமூக சேவைகள் திணைக்களம் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் சமூக சேவை வேலைத் திட்டங்களைச் சரிவர அமுல் செய்வதற்கு அரசாங்கம் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என்று யாழ். மாவட்ட சமூக சேவை திணைக்கள அதிகாரிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.**

யாழ். மாவட்டம் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு சமூக கட்டுமானப் பாதிப்புக்கள் பலவும் ஏற்பட்டுள்ளன. எனவே இங்குள்ள மக்களின் சமூக மேம்பாட்டிற்கான பல புதிய திட்டங்களை அமுல் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

இப்புதிய திட்டங்களை அமுல் செய்வது பற்றிய ஆலோசனைகளும் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வருகின்றபோதும் இதற்கு அரசு போதியளவு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை.

இதனால் யாழ். மாவட்டத்தில் சமூக சேவை திட்டங்கள் எதனையும் திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியுடன் மலசலகூடம் அமைக்குக

(வலி-மேற்கு)

யாழ். மாவட்டத்தில் மலசல கூடங்களை அமைக்கும் போது சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியைப் பெற்றே அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மலசல கூடங்களை அமைத்து வரும் மக்கள் மலசலகூடங்களின் அமைவிடங்களை சரியான முறையில் கவனிக்காது அமைத்து வருகின்றனர். இதனால் குடிநீர்க் கிணறுகளுக்கு அண்மையிலும், மலசலகூடக் குழிகள் அமையும் சாத்தியப்பாடு இருக்கின்றது.

மலசல கூடங்களை அமைக்கும் போது மக்கள் முதலில் அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் அனுமதிகளையும், சிபார்சுகளையும் பெற்ற பின்னரே அதனை அமைக்க வேண்டும்.

இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய கடமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் இருக்கின்றது. சகல விதிமுறைகளுக்கமைவாகவும், அமைக்கப்படும் ஒரு மலசலகூடமே பயனாளிகளுக்கும், அயலவர்களுக்கும் உரிய சுகாதாரத்தைக் கொடுக்கும் ஒன்றாக அமையும் என்று யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார். (37)

# சர்வதேச ஆங்கிலக் கல்லூரி மானிப்பாயில் நிறுவ ஏற்பாடு

(வலி. மேற்கு)

ஜேர்மன் சர்வதேச தொண்டு நிறுவனமான கியூமெடிக்கா நிறுவனம் மானிப்பாயில் சர்வதேச ஆங்கிலக் கல்லூரி ஒன்றை நிறுவ முன்வந்துள்ளது.

இக்கல்லூரியை நிறுவுவதற்கென கியூமெடிக்க நிறுவனம் சுமார் 100 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருப்பதாக அந்நிறுவனத்தின் வடபகுதி இணைப்பாளர் சாம் ராஜசூரியர் தெரிவிக்கின்றார்.

இக்கல்லூரியில், ஆரம்ப கட்டமாக தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவர்களே உள்வாங்கப்படுவர் என்றும் - தொடர்ந்து மேல்நிலை மாணவர்களும் கட்டம் கட்டமாக உள்வாங்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கல்லூரியில் ஆங்கில பாடத்தைப் போதிப்பதற்கு தகுந்த ஆங்கிலப் பட்டதாரிகளிடம் இருந்து கியூமெடிக்கா நிறுவனம் விண்ணப்பங்களைக் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

# கலைப்பீட நுண்கலைக்கழக மாணவர்களுக்கானபரீட்சை

(வலி-மேற்கு)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்குமான பரீட்சைகள் இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி வரை நடைபெற விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் வருடம் முதலாவது அரையாண்டுக் கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதியும், மூன்றாம் வருடம் முதலாவது அரையாண்டு கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சை இம்மாதம் 25 ஆம் திகதியும், நான்காம் வருடம்-முதலாவது அரையாண்டு கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சை செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதியும், இரண்டாம் வருடம்- முதலாவது அரையாண்டு கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சை செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதியும் நடைபெறவிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைப்பீட், இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் இம்மாதம் 22ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (37)

# போலி ஓட்டுனர் உரிமங்கள் வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கை

போலியாக தயாரிக்கப்பட்ட வாகன ஓட்டுனர் உரிமங்களின் புழக்கம் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ளதாக சிறிலங்காப் பொலிசார் அறிவித்துள்ளனர். இவ்வாறு தயார்செய்யப்பட்ட போலி ஓட்டுனர் உரிமங்களை வைத்திருப்போர் கைது செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பொலிசார் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த மாதத்தில் தென்மராட்சி மற்றும் யாழ். நகரப் பிரதேசங்களில் இவ்வாறான போலி ஓட்டுனர் உரிமங்களைப் பயன்படுத்திய பத்திற்கும் அதிகமானோர் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் அறிவித்துள்ளனர். இவ்வாறான போலி உரிமங்கள் சில முகவர்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலிசார் கூறினர். (33)

# கால்நடை வளர்ப்போர் கூ.ச.சமாசம் யாழ். மாவட்டத்தில் அங்குரார்ப்பணம்

(வலி.மேற்கு)

யாழ். மாவட்டக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், நல்லூர் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த. துரைமணி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களையும் ஒன்றிணைத்து யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு மிகவிரைவில் முத்திரைகள்

(வலி.மேற்கு)

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு மிக விரைவில் சமுர்த்தி முத்திரைகள் வழங்கப்படவிருக்கின்றன என்று அப்பிரிவின் பிரதேச செயலர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேச செயலகத்துக்கு யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கடந்த வாரம் ஆறாயிரத்து 73 சமுர்த்தி முத்திரைகளை அனுப்பி வைத்துள்ளார். இம்முத்திரைகள் இப்பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலமாகச் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தில் சுமார் 40,000 பயனாளிகள் சமுர்த்தி நிவாரண முத்திரைகளைப் பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (37)

# மூதாதையர் தேடிவைத்த மரங்களை நாம் அழித்துவிடக் கூடாது

## -வலி. மேற்குப் பிரதேச செயலர்

(வலி.மேற்கு)

நமது மூதாதையர் நமக்காகத் தேடிவைத்த சொத்தாக இருக்கும் பெருமரங்களை நாம் ஒரு போதும் அழித்துவிடக்கூடாது. மரங்களை எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் நமது மூதாதையர் நாட்டிப் பராமரித்து வளர்த்துவிட்டிருப்பர் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

இவ்வாறு வலி-மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்துள்ளார். சமீபத்தில் வலி.மேற்குப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் வைத்து பயன்தரு மரக்கன்றுகளை மக்களுக்கு விநியோகித்தது. இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துரையாற்றிய அவர், மரங்களை நாட்டிவிட்டால் மட்டும் போதாது. அவற்றைச்சிறந்த முறையில் பராமரித்து வளர்க்கவும் முயலவேண்டும். மரங்களை வளர்ப்பதால் நல்ல காற்றுக்கிடைக்கின்றது. சுற்றுச்சூழல் சுகாதாரம் பேணப்படுகின்றது. மக்களின் ஆரோக்கியம் வலுப்பெறுகின்றது. பாதுகாப்பான மழைவளம் மிக்க தேசம் உருவாகின்றது.

எமது தாய், தந்தையர் மரங்களை நாட்டினார்கள். சுற்றுச்சூழலைப் பாதுகாத்தார்கள். தேகாரோக்கியத்தோடு வாழ்ந்தார்கள். இன்றைய சமூகத்தில் வாழும் நாம் அம்மரங்களை தறித்து எமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றோம். இதனால் சூழலில் வெப்பம் அதிகரிக்கின்றது. சுற்றாடல் சமநிலை சீர்குலைக்கின்றது. மக்கள் தேகாரோக்கிய மற்றவர்களாக மாறிக்கொண்டிருக்கின்றார்கள்.

சூழலைப் பேணிப்பாதுகாப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். போர்க்காலச் சூழல் இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் எமது தாயகத்தில் கணிசமான மரவளங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றிலும் பார்க்க இன்று மோசமான வகையில் நம்மவர்கள் மரங்களை மிகவும் அநாவசியமான முறையில் அழித்து வருகின்றார்கள் என்றார்.

இம்மரவிநியோக நிகழ்வில், சவுண்டி,மருதம், தேக்கு போன்ற பயன்தரு பெருமரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

நிகழ்வில் வலி-மேற்குப் பிரதேசப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (37)

# தொடர்பு கொள்க

(அலுவலக செய்தியாளர்)

தொலைக்கல்விப் பாடநெறியில் பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கான பரீட்சை வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். கல்வி வலயத்தில் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கோரியுள்ளார். (சு)

# வருடாந்த மஹோற்சவம்

(வடமராட்சி)

பிரசித்திபெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை காலை 9.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவிருக்கும் மஹோற்சவத் திருவிழாவில் இம்மாதம் 17 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 18 ஆம் திகதி, காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி காலை 8.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 5.00 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவும் இம்மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.தொடர்ந்து 28 தினங்கள் மஹோற்சவப்பெருவிழா வெகு விமர்சையாக இடம்பெறவிருக்கின்றது. ஆலய வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டு யாழ் மாநகரசபை சுகாதார ஊழியர்கள் ஆலய வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளிலும், நீர்விசுறும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். (37)

# யாழ்.பன்னாலைக் கிராமத்தில் 34 வீடுகள்அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பன்னாலைக் கிராமத்தில் 34 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் முன்வந்துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைககள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட பன்னாலைக்கிராம மக்களின் நலனைக் கவனத்தில் கொண்டே இவ் 34 வீடுகளையும் அமைத்துக்கொடுக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் முன்வந்துள்ளது.

இவ்வீடுகள் யாவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் முரளிதரன் தெரிவித்தார். (33)

# பாடசாலைகளில் சுகாதாரப் பிரச்சினை; முற்றாக ஒழிக்க யுனிசெப் உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவிவரும் சுகாதாரப் பிரச்சினைகளை முற்றாக ஒழிப்பதற்கான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் உறுதி வழங்கியுள்ளது.

இது சம்பந்தமான உறுதி மொழியை ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷிற்கு வழங்கியுள்ளனர்.


யாழ்.மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் சுகாதார நிலைமைகள் மோசமடைந்துள்ளதனால் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை கவனத்தில் கொண்டே ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இவ்வுதவியை வழங்க உறுதியளித்துள்ளது.

இதற்கு அமைவாக யாழ்.மாவட்டத்தில் சுகாதாரப் பாதிப்புக்கள் உள்ள பாடசாலைகளை இனம் கண்டு அவற்றை முன்னுரிமைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (37)

# நாட்டுப்பற்றாளர்கள் அல்ல நாட்டுக்குத் தீ வைப்பவர்கள்

லக்பிம சிங்கள [illegible]
பேராசிரியர் குமார[illegible]
மொழியாக்கம் - அ.சக்திவேல்

நாற்பதாயிரத்திற்கு மேல் உயிரிழப்புக்களையும், இலட்சக்கணக்கிலான மக்களின் இடம்பெயர்வுகளையும், கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்தும் துவம்சம் செய்த சுனாமிப் பேரலையில் சிக்கிய மக்களுக்கு உதவிகளைச் செய்யும் பொருட்டு சுனாமி அபிவிருத்தி கூட்டு ஒப்பந்தம் செய்ததை இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் வரவேற்பதுடன் சர்வதேச சமூகமும் இதற்கு உதவிகளைப் புரிவதற்கு முன்வந்துள்ளது. பாராளுமன்றத்தில் அரசாங்கம் சிறுபான்மை பெற்றிருந்தாலும் சுனாமி கூட்டு ஒப்பந்தம் இங்கு முக்கிய கட்சிகளால் வரவேற்கப்பட்டது. அப்படி இல்லாவிட்டால் சுனாமிப் பேரலைகளால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கு உதவிகளைப் புரிவதற்காக சர்வதேச சமூகம் நேரடியாக விடுதலைப் புலிகளுக்கு உதவிகளைச் செய்திருக்கும். சுனாமிப் பேரழிவு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குத் தவறியிருந்தால் தென் பகுதி இனவாதக் கும்பல்கள் சுனாமி நிதியை வடக்கு-கிழக்கிற்கு வழங்குவதற்கு பெரும் எதிர்ப்புக்களை தெரிவித்திருக்கும். அப்படி அம்மணி அவர்கள் தவறியிருந்தால் இதன் பிரதிபலன்கள் விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக அமைந்திருக்கும்.




இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளின் பொழுது 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இவற்றைத் தடை செய்வதற்கு பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தபடியால் இவையாவும் கைகூடாமல் போயின. அதேபோல் சுனாமிக் கூட்டுச்சபைக்கு எதிராக இனவாதிகள் உயர்நீதி மன்றத்தை தடையுத்தரவு பிறப்பிக்குமாறு தொடர்ந்த வழக்கில் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தின் சில சரத்துக்களுக்கு உயர்நீதி மன்றம் தடை விதித்துள்ளது. இது இனவாதி களுக்கு கிடைத்துள்ள இடைக்கால வெற்றியாகும்.

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இலங்கை அரசுக்கு விருப்பமில்லை என சர்வதேச சமூகம் இப்பொழுது உணர்ந்துள்ளபடியால் விடுதலைப்புலிகள் தங்களின் கோரிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமைந்து விட்டது. சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு தீர்ப்பு வழங்குவதற்கு காலங்கள் இன்னும் உதயமாகவில்லை. விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் அதன் நியாயங்களையும் இருதரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆகையால் இதை உயர்நீதிமன்றம் தட்டிக்கழிக்க முடியாது.

எது எப்படியானாலும் உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத்தீர்ப்புக்கள் சமாதான நடவடிக்கைகளுக்குப் பாதகத்தை உண்டு பண்ணியுள்ளது.

பாதுகாப்புச் சம்பந்தமாக இலங்கை இராணுவம் கடைப்பிடித்து வரும் கொள்கைகளில் நம்பிக்கை இல்லாதபடியால் தங்களின் பாதுகாப்பைத் தாங்களே தேடிக்கொள்வோம் என விடுதலைப்புலிகள் அரசுக்கு அறிவித்துள்ளனர். அதே நேரத்தில் சனாதிபதித் தேர்தல் நடக்கும் காலம் பற்றியும் சில பிணக்குகள் ஏற்பட்டுள்ளன. இன்று யுத்தநிறுத்த ஒப்பந்தம் செயலற்றுள்ளபடியால் நாட்டின் பொருளாதாரத்தில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்பொழுது சிறுபான்மை பலம் கொண்ட கட்சி நாட்டை ஆட்சி புரிகின்றது. எனவே இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டுமானால் ஒன்று பாராளுமன்றத்தைக்கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்தவேண்டும். இல்லையேல் இந்த நாட்டின் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து ஒரு முடிவை எடுக்கவேண்டும். இது சனாதிபதித் தேர்தல் காலத்தை நிர்ணயிக்கும் இழுபறி சிக்கல்களுக்கு முடிவு கட்டும். எது எப்படியானாலும் சனாதிபதித்தேர்தல் நடக்கும் நாட்கள் சம்பந்தமாக அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் விவாதம் ஒன்றை நடத்தினால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேர்தல் ஆணையாளரின் தீர்மானம் மிக அவசியமாகின்றது.

இன்று நாட்டில் இரண்டுபெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒரே அரசியல் நிலைப்பாட்டிற்கு கட்டாயம் வரவேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு இவர்கள் பதில் சொல்லிஆக வேண்டும். அதாவது போர்நிறுத்தத்தை முன்னெடுத்துச்செல்வதற்கு விடுதலைப் புலிகளுக்கும் பங்குண்டு. எனவே ஏனைய அமைப்புக்களிடம் இருந்து ஆயுதங்களை களைவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்கு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை ஒரு யுத்தத்திற்கு வழி வகுக்கும். மீண்டும் நோர்வே அனுசரணையுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். மீண்டும் யுத்தம் இந்த நாட்டில் ஏற்படாதவண்ணம் அவர்களிடம் இருந்து உத்தரவாதம் பெறவேண்டும்.

உயர்நீதிமன்ற தீர்ப்புகள் சிலவேளை சனாதிபதிக்கு ஒரு சவாலாக அமையலாம். இத்தருணத்தில் சனாதிபதி அவர்கள் தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவிக்க வேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்படுவார். இதனை எதிர்க்கட்சியின் ஆதரவுடனும் மக்களின் அனுசரணையுடனும் நிறைவேற்ற முடியும். இதனால் மீண்டும் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றிக்கொள்ள முடியும். சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கிற்கும் தென்பகுதிக்கும் மக்கள் மீளக்குடியமர்வு, ஏனைய அபிவிருத்தித்திட்டங்கள் என்பன முற்றாக நடைபெறவில்லை. இதையிட்டு நாங்கள் மனநிறைவு கொள்ளமுடியாது. அப்பாவி மக்கள் இதில் பாதிக்கப்பட்டுள்ளனர். டெப்ரன் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டவை மாவட்ட செயலாளர்களின் காரியாலயங்களினால் இன்னும் அமுல்படுத்த முடியவில்லை. நூறுமீற்றருக்குள் வாழ்ந்த மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். வடகிழக்கு மட்டுமல்ல. தெற்கிலும் இதேகதிதான்.

நீதிமன்றத் தீர்ப்பு இல்லாமல் எதையும் அமுல்படுத்த முடியாதென்று நினைப்பது தவறாகும். இடைக்காலத்தடை உத்தரவில் மாற்றங்களை மட்டும் செய்யலாமென உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனபடியால் யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்டத்தை ஏற்படுத்தி அதை அமுல்படுத்த முடியும். ஆகவே அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவிகளுக்கு எந்தப்பாதிப்புகளும் இந்தத்தடை உத்தரவால் ஏற்படாது. ஆனால் இதை இந்நாட்டின் பல அரசியல் கட்சிகள் பயன்படுத்தி அரசியல் [illegible] முயற்சிகளில் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றபடியால் நாடு மீண்டும் ஒரு பேரழிவைச் சந்திக்க நேரிடும். இவர்கள் நாட்டுப்பற்றாளர்கள் அல்ல நாட்டுக்குத் தீ வைப்பவர்கள்.

O

---

# உலகமும் எந்த அமைப்புகளும் நாம் பலமாயிருக்கும்வரைதான் மதிப்பளிக்கும்

### தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் இளந்திரையன்

இந்த உலகமும், எந்த அமைப்பும் நாம் பலமாய் இருக்கும்வரைதான் எங்களுக்கு மதிப்பளிக்கும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார். மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எழுச்சி மாநாட்டு நிகழ்வில் இளந்திரையன் மேலும் உரை நிகழ்த்துகையில்,

சமாதானம் தொடங்கிய நாட்களில் இருந்து இந்த நிமிடம் வரை அந்த சமாதானத்தைக் காப்பாற்றுவதற்காக இரத்தமாகவும், உயிராகவும் கொடுத்துக் கொண்டு இருப்பவர்கள் நாங்கள். உங்களுடைய பிள்ளைகள் சீலன் என்றும், சௌசல்யன் என்றும் இரத்தம் இரத்தமாக சிந்திக் கொண்டு தன்மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் நாங்கள்.

சிங்கள மக்களிடம் நாங்கள் ஒன்றைச் சொல்கின்றோம்.சிங்கள மக்கள் எங்களுக்கோ நாங்கள் சிங்கள மக்களுக்கோ எதிரிகள் அல்லர் - நண்பர்கள். ஆட்சியாளர்களும் அவர்களுடைய படைகளும் தான் இங்கு எதிரிகளாய் நிற்கின்றார்கள். 1987ஆம் ஆண்டிலே இந்தியப்படை இங்கே இருந்தபோது ஒட்டுமொத்த இலங்கையில் சீர்திருத்தமான விடுதலைப் போராட்டத்தை எங்களுடைய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தனியாக நடத்தி முடித்தார் என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் இன்று புரிந்துகொள்ள வேண்டிய விடயம் ஒன்று இருக்கின்றது. 1983ஆம் ஆண்டு கலவரம் நடந்தது. யார் வந்தார்கள் என்ன கேட்டார்கள். ஒன்றுமில்லை. இன்று வந்து 15 வயதுப் பிள்ளை பயிற்சிக்கு வந்ததா என்று கேட்கின்றார்கள். அந்தப் பிள்ளை ஏன் வருகின்றது என்று யாராவது கேட்கின்றார்களா?

1983ஆம் ஆண்டு பதினைந்து நாட்களும், செல்லாத பச்சிளம் குழந்தைகளைப் போட்டு எரித்தார்கள் யார் வந்தார்கள்? இன்று வருகின்றார்கள். ஏன்? எமது நிலத்திலே ஒரு பலம் இருக்கின்றது. எமக்கோர் சந்ததி இருக்கின்றது. தமிழனாகிய எங்களுக்குப் பின்னே எவரும் தீண்ட முடியாது என்று சொல்கின்ற மாபெரும் சக்தி இருக்கின்றது. அந்தப் பலத்திற்கு மரியாதை செலுத்த வருகின்றார்கள். ஒரு பலம்தான் இன்னொரு பலத்திற்கு மரியாதை செய்யும். ஆகவே, நான் கேட்டுகொள்வது இதுதான்.

இந்த உலகமும், எந்த அமைப்புக்களும் நாங்கள் பலமாய் இருக்கும் வரையும்தான் எங்களுக்கு மதிப்பளிக்கும். இவ்வாறு இளந்திரையன் தமதுரையில் குறிப்பிட்டார்.

---

# புதுக்குடியிருப்பு பிரதேச கமக்கார அமைப்புக்களுக்கான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச கமக்கார அமைப்புக்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்தில் கமநல சேவை நிலைய பெரும்பாக .உத்தியோகத்தர் க.மாதவராசா தலைமையில் செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணிக்கு கருத்தரங்கு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கருத்துரைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் அ.சின்னண்ணா, புதுக்குடியிருப்பு பிரதேச விவசாயத் திணைக்கள விவசாயப் போதனாசிரியர் க.விஜயன் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பிறையாளன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன திட்ட அலுவலர் சி.ஆறுமுகம் ஆகியோர் வழங்கினர். சி.கரிகாலன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:- உற்பத்தியாளர்கள் தற்போது எதிர்நோக்கி வரும் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வொன்றைக் காணுவதற்கான முழு அளவிலான வேலைத் திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் மூலம் உற்பத்தியாளர்கள், நன்மையடைய இருக்கின்றார்கள்.

உண்மையில் உற்பத்திக்கேற்ற வருமானம், உற்பத்தியாளர்களுக்கு கிடைப்பதில்லை. இதனால் உற்பத்தி கைவிடப்படும் நிலை ஏற்பட்டு வருகிறது.

இவற்றைக் கருத்தில் எடுத்தே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சந்தைகளில் "உற்பத்தியாளர் சந்தைகளை" ஏற்படுத்தவுள்ளது.

இதன் பயனாக உற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைகளில் விற்பனை செய்ய முடியும், நாம் தற்பொழுது பொருண்மிய வளங்களை மேம்பாடடையச் செய்தால் தான் விடுதலையை அடைந்த பின்னர் எமது மக்கள் சுபீட்சமாக வாழ முடியும்.

எமது பொருண்மிய வளங்களை பாதுகாக்க வேண்டும். அவற்றை மேமபடுத்த வேண்டும் எனத் தெரிவித்ததோடு கால்நடை அபிவிருத்தியையும் மேம்பாடையச் செய்யவேண்டும். அவற்றையெல்லாம் செய்வதற்கு கமக்கார அமைப்பினர் நன்கு பலம் பொருந்திய கட்டமைப்பாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் எமது இலக்கை அடைய முடியும் எனக் குறிப்பிட்டார்.இக்கலந்துரையாடலில் சந்தைப்படுத்தல், நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி, சிறுகுளங்கள், புனரமைப்பு போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன, கலந்துரை யாடலில் புதுக்குடியிருப்பு பிரதேசத் திற்குட்பட்ட கமக்கார அமைப்பினர் கலந்து கொண்டனர். (46)

# போர் நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி வான்படை உயர் தயார் நிலையிலுள்ளது

## சிறிலங்கா வான்படைத் தளபதி கூறுகிறார்

(கொழும்பு)

**கடந்த மூன்று வருட போர்நிறுத்த காலம் சிறிலங்கா வான் படையினருக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்ததாகவும், இந்தக் காலத்தை பயன்படுத்தியே பயிற்சிகள் மூலம் உயர்ந்தபட்ச தயார் நிலையில் இருக்க கூடியதாக இருப்பதாகவும் சிறிலங்கா வான்படைத் தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கா வான்படைக்கு பயிற்சி உதவிகளை வழங்குவதில் சார்க் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன. இந்தப் பயிற்சிகளின் மூலம் வான்படையின் தரத்தை கடந்த மூன்றாண்டுகளில் பெருமளவில் உயர்த்த முடிந்தது. விடுதலைப் புலிகளிடம் 1000 மீற்றருக்கும் அதிகமான நீளம் கொண்ட ஒரு வானூர்தி ஓடுபாதை இருக்கின்றது. இது ஒன்றும் இரகசியமில்லை எனத் தெரிவித்துள்ள வான்படைத் தளபதி விடுதலைப் புலிகளின் ஓரிரண்டு வானூர்திகளை தாம் படம் பிடித்துள்ளதாகவும் விடுதலைப்புலிகளிடம் பெரும் வான்படைப் பலம் கிடையாது; ஆயினும் தாம் அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரண நடவடிக்கைகளின் போது புலிகளின் வானூர்திகள் தொடர்பான சான்றுகளைத் திரட்டிக் கொள்ள தமது நட்பு நாடுகள்(இந்தியா) உதவி செய்தன எனவும் புலிகளின் வான்படையின் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற் கொண்டு வருவதாகவும் ஆனால் அதுபற்றி விபரங்களை வெளியிட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல், பிரிட்டனிடம் பெற்ற மூன்று கடற்கலங்கள் செயலிழப்பு!

(கொழும்பு)

இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரு பீரங்கிப் படகுகளும், பிரித்தானியாவிடமிருந்து வாங்கப்பட்ட ஹுவர் கிறாவ்ற் என்ற கடற்கலமும் செயலற்ற நிலையில் துறைமுகம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ஹுவர் கிறாவ்ற் கடற்கலம் ஒரு மில்லியன் பிரித்தானிய பவுண்ஸ் களுக்கு 1997ஆம் ஆண்டும், பீரங்கிப் படகுகள் இரண்டு, 52 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் 2000ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந் தன.இம் மூன்று கடற்கலங்களின் பாவனைக் காலம் முடிந்த நிலையி லேயே சிறிலங்கா கடற்படையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கடற்கலங்களின் முதன்மை இயந்திரங்கள் யாவும் பழுதடைந் துள்ளதால் கடற்படையினர் இவற்றை பயன்படுத்த முடியாமல் துறைமுகம் ஒன்றில் நிறுத்தி வைத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

# கொழும்பில் முக்கிய பிரமுகர்கள் வீடுகளுக்கு பலத்த பாதுகாப்பு!

**-சிறிலங்கா பொலிஸ் தரப்பு அறிவிப்பு**

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலுமுள்ள முக்கிய பிரமுகர்கள் அனைவரினதும் வீடுகளுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வீட்டருகே சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாக மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கதிர் காமரின் வீட்டையும், அதனைச் சூழ வுள்ள பிரதேசங்களையும் வீடியோ எடுத்ததாகக் கூறியே இந்த மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து டிஜிற்றல் கமரா ஒன்றும்; மூன்று செல்லிடத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து முக்கிய பிரமுகர்கள் அனைவரது வீடுகளுக்கும், முக்கிய அரச நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட சிறிலங்கா பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சமசமாஜக் கட்சியின் ஆதரவு மகிந்த ராஜபக்ஷவிற்கே

**-தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு**

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் பிரதமர் ராஜபக்ஷவுக்கு முழு ஆத ரவையும் தமது கட்சி வழங்கப் போவ தாக சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் தகுதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மாத்திரமே உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

மகித்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற்றதால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் ஏற்பட இருந்த பிளவுகள் தற்பொழுது நின்றுவிட்டதென பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

# தொண்டராசிரியர் நியமனங்களில் குருநாகல் - நிக்கவரெட்டியவில் முறைகேடுகள்

(கொழும்பு)

குருநாகல் மாவட்ட நிக்கவ் ரெட்டிய கல்வி வலயத்தில் தொண் டராசிரியர்கள் நியமனங்களின் போது பல முறைகேடுகள் இடம்பெற்றிருப் பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜே. வி.பியின் வடமேல் மாகாண சபை உறுப்பினர் நிமல் ஹேரத் இந் தக் குற்றச்சாட்டை முன்வைத் தார்.குறித்த அரசியல்வாதியின் அனுசரணையில் பாடசாலை அதிபர் பிள்ளைகள் மூவர், கல்விப்பணிப்பாளர்களின் பிள்ளைகள் இருவர், கல்விப்பணிமனை ஊழியர் களின் பிள்ளைகள் இருவர், ஆசிரியர் களின் மனைவிமார் இருவர் பல்கலைகழகத்தில் பயில்கின்றவர் கள் இருவர் மற்றும் ஆசிரியர் களாக பணியாற்றாதவர்கள் 18 பேர் என பலர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியதாக நிமல் ஹேரத் சுட்டிக் காட்டினார்.

# போலி 500ரூபா நோட்டுக்களை அச்சிட்ட மூவர் கைது

அச்சிடப்பட்டிருந்த 123,500 ரூபா பெறுமதியான 247 போலி 500 ரூபா நோட்டுக்களுடன் மூன்று சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வுப்பிரிவு பொலிசாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவர்கள் சுமார் 3,000 ஐநூறு ரூபா நோட்டுக்களை அச்சிட்டு புழக்கத்தில் விட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒரு பெண்ணும் அடங்குகிறார். இந்த போலி நோட்டுக்களின் பெறுமதி 15 இலட்ச ரூபாவிற்கும் மேல் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் அச்சிட்ட போலி ரூபாய் நோட்டுக்களை திவுலப்பிட்டிய, மினுவன்கொடை மற்றும் ஜா-எல ஆகிய பிரதேசங்களில் புழக்கத்தில் விட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# சனாதிபதித் தேர்தல் குறித்த நிலைப்பாட்டை மாத இறுதிக்குள் ஜே.வி.பி வெளியிட முடிவு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது பொதுவான கூட்டணியை ஆதரிப்பதா என்பது தொடர்பான தனது முடிவினை ஜே.வி.பி இம்மாதத்திற்குள் அறிவிக்கவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரிவினைவாதிகள் தொடர்பாக இடைப்பட்ட நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்குமாயின் பொதுவான கூட்டணிக்கு ஆதரவளிக்கக் கூடாதென ஜே.வி.பி யின் அரசியல் பீடத்திற்கு ஏற்கனவே யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்றும் பொதுவான கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் கட்சியின் கிளைக் காரியாலயங்களால் இருவேறுயோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் தொடர்பில் ஜே.வி.பியின் அரசியல் பீடம் கூடி முடிவெடுக்கவுள்ளதுடன் இது தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் பொறுப்பை மத்திய குழுவிடம் ஒப்படைப்பது என்றும் முடிவாகியுள்ளது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றி ஜே.வி.பி தனது கிளைக் காரியாலயங்களின் யோசனைகளைக் கேட்டபோதே இந்த யோசனைகள் வந்துள்ளன.

சனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவினை எடுப்பதற்காக ஜே.வி.பி யின் அரசியல் பீடம் வெகுவிரைவில் கூடவுள்ளது.

# இரவு 10மணிக்குப்பின் மதுபானம் விற்கத்தடை

நாடெங்கும் உள்ள விடுதிகள், விளையாட்டுக் கழகங்கள்; வாடிவீடுகள் ஆகியவற்றில் இரவு 10 மணிக்கு மேல் மதுபான விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதன்படி இரவு 10 மணிக்கு மேல் அந்த இடங்களில் மது அருந்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இரவு களியாட்ட விடுதிகளில் இடம் பெறும் முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிசாரை அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார். எதுவித காரணங்களுக்காகவும் இந்தக் கட்டளைகளை மீற வேண்டாமென அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்துள்ளார்.

## பிரதி அமைச்சர் பிரேம்லால் இராஜினாமா

நீர்ப்பாசன வடிகால் அமைப்பு ஆற்றுபடுகை மற்றும் ரஜரட்ட அபி விருத்தி பிரதி அமைச்சர் பிரேம் லால் ஜெயசேகர நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

அதேநேரம் கட்சியின் நிவித் திகல தொகுதி அமைப்பாளர் பதவி யில் இருந்தும் அவர் விலகியுள் ளார்.இது தொடர்பாக அவர் சனாதி பதிக்கும் பிரதம மந்திரிக்கும் அறிவித்துள்ளார்.

தமக்கு வெறும் பெயருக்கு மாத்திரமே பதவி தரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், இதன் கார ணமாக அதிகாரிகளின் உரிய சேவையை பெற்றுக் கொள்ளமுடிய வில்லை என அவர் குறிப்பிட்டார்.

# மக்கள் தொடர்பை ஏற்படுத்த பொலிசார் புதிய திட்டம்

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் தொடர்பாக மக்கள் பொலிசாருக்கு ஒத்துழைப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பமாகிறது. நாட்டின் அனைத்து பொலிஸ் எல்லைகளிலும் மக்கள் பொலிசாரோடு தொடர்பு கொள்ளக் கூடிய விடயங்கள் தொடர்பிலான பெரிய பதாகைகளை நிறுவுவதே இந்த வேலைத் திட்டமாகும். இலங்கை பொலிசாருக்கு இது தொடர்பில் தேவையான வளங்களை வழங்குவது யூனியன் அசூரன்ஸ் நிறுவனமாகும். சீதுவை மற்றும் ஜா-எல பொலிஸ் எல்லையான தண்டுகம பாலத்திற்கு அருகே நிறுவப்பட்டுள்ள முதலாவது பதாகை பொலிஸ் மா அதிபர் சந்திராபெனான்டோவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. யூனியன் அசூரன்ஸ் பிரதான நிறைவேற்று அதிகாரி மரினா நவரட்ணமும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

# சேதுசமுத்திரத்திட்டத்தின் விளைவுகள் குறித்து சிறி.வின் யோசனையை ஆராய இந்தியா ஆர்வம் காட்டவில்லை

சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆராய இரு நாடுகளின் கூட்டு கண்காணிப்பு முறையை ஏற்படுத்த வேண்டும் என இந்தியாவிடம் இலங்கை தெரிவித்த யோசனை குறித்து இந்தியா ஆர்வம் காட்டவில்லை என இந்திய இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது

இத் திட்டம் தொடர்பாக இரு நாடுகளின் நிபுணர்கள் மற்றும் அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை டில்லியில் நடத்திய ஆய்வின்போது இலங்கைத் தரப்பில் இக் கருத்து வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை தரப்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் முதலில் கருத்துத் தெரிவித்த போது குறிப்பாக, சுற்றுச்சூழல், மீன்வளம், கப்பல் தடத்தில் ஏற்படும் ஆபத்துக்கள் இத் திட்டத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஹைட்ரோடைனமிக் நவீனமயப்படுத்தும் முறை ஆகியவை குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர். சுற்றுச்சூழலுக்குப் பெரிய பாதிப்பு ஏற்படாது என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், தங்களது ஆய்வின்படி பாதிப்பு ஏற்படும் என்று தெரியவந்துள்ளதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். மன்னார், புத்தளம் பகுதிகளில் கடல் வளங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் மக்களின் பிரதான வாழ்வாதாரமான மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் என்றும் அச்சம் தெரிவித்தனர். இந்த நிலையில்இரு நாடுகளும் தங்களிடம் உள்ள ஆய்வு விபரங்களைப் பகிர்ந்து கொண்டால்தான் முழுமையான புரிந்துணர்வு ஏற்படும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தினர்.

எனினும் அதுகுறித்து இந்தியத் தரப்பில் எந்த உறுதிமொழியும் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன்கால்வாய் அகழ்வின்போது எடுக்கப்படும் கழிவுகளைக் கொட்டினால் அது எந்த அளவுக்குப் பரவுகிறது என்பதைக் கண்காணிக்க கூட்டுக் கண்காணிப்பு முறை அவசியம். அந்தக் கண்காணிப்பை எப்படி மேற்கொள்வது என்ற வழிகாட்டு நெறிகளை உருவாக்க வேண்டும் என்றும் இலங்கை நிபுணர்கள் கேட்டுக்கொண்டனர். ஆனால் கழிவுகள் இலங்கைக் கடலோரப் பகுதி வரை வருவதற்கு வாய்ப்பு இல்லை என இந்திய அதிகாரிகள் தெரிவித்ததாக தெரியவருகிறது. இதேவேளை கச்சாய்எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் விபத்தில் சிக்கி, அவற்றில் இருந்து கசிவு ஏற்படுமானால் அது இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இலங்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். ஆனால், கச்சாய் எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களை சேதுசமுத்திரக் கால்வாய் வழியாக அனுமதிக்கப் போவதில்லை என இந்திய அதிகாரிகள் உறுதியளித்தனர். அதேவேளைஇருதரப்பிலும், மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் சென்று மீன்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து கவலை தெரிவித்தனர். அதனால் சேது கால்வாய் உருவாக்கப்பட்டால், அதை ஒரு கட்டுப்பாட்டுக் கோடாக வைத்து, இரு நாட்டு மீனவர்களும் அதனைத் தாண்டிச் செல்லாமல் தடுக்க முடியு மென இந்தியக் கடற்படை சார்பில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மூன்று இலங்கையர்களுக்கான மரணதண்டனை மீள் பரிசீலனை!

(கொழும்பு)

மூன்று இலங்கையர்களுக்கு சவுதியரேபியாவில் வழங்கப்பட்ட மரண தண்டனை குறித்து மீள்பரிசீலனை செய்யப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையர் மூவருக்கு எதிராக சவுதியரேபிய நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி மீள்பரிசீலனை செய்வதற்கு அந்தநாடு தீர்மானித்திருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக சவுதியரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகம், தமக்கு அறிவித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையர்கள் மூவருக்கும் வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை மாற்றுவதற்கு கவனம் செலுத்துமாறு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அனுப்பியிருந்த மேன்முறையீட்டின் பலனாகவே சவுதிஅரேபியா இந்தத் தீர்மானத்துக்கு வந்திருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் சுட்டிக் காட்டினார்.


## சுனாமியில் சாவடைந்த என் உயிர் மனைவியின் பிறந்த நாள் நினைவு





கடலின்கரையோரம் வாழ்ந்த எம் முத்துக்களே
காலனவன் உங்களை கவர்ந்து சென்றானோ
சென்ற வருடம் உன் பிறந்த
நாளில் நாம் மகிழ்ந்தோம்
இந்த வருடம் கண்ணீரில் மிதந்து
நிற்கின்றோம் – உன்மகனும், நானும்

அமரர் திருமதி. சிவகுமார் மரியசெல்வரஞ்சினி
தாயின் மடியில் 1981–08–04
கடலின் கோரப்பிடியில் 2004–12–26

சிவகுமார் எழிலினி
தாயின் மடியில் 2004–11–26
கடலின் கோரப்பிடியில் 2004–12–26

முல்லைப்பட்டினம் முல்லைத்தீவு.

தகவல்:–
கணவன்,மகன்,
முல்லைத்தீவு

(6196)



## சாவு அறிவித்தல்

### இராஜேஸ்வரன் கௌலினி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல 26,ஒட்டறுத்தகுளம் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் மல்லாவி மத்திய கல்லூரி மாணவியும், தற்போது பளை மத்திய கல்லூரி தரம் 10 மாணவியுமான இராஜேஸ்வரன் கௌலினி 01.08.2005 அன்று அகாலச்சாவடைந்துள்ளார்.

அன்னார் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசிப்பவருமான சபாபதிப்பிள்ளை இராஜேஸ்வரன் (குட்டி), சாந்தினி (ஆசிரிய ஆலோசகர் துணுக்காய் கல்வி வலயம் )ஆகியோரின் ஏக புத்திரியும், கௌசிகன், நிருத்திகன்ஆகியோரின் அருமைச் சகோதரியும், சபாபதிப்பிள்ளை (ஓவசியர்) காலஞ்சென்ற காமாட்சியம்மா, காலஞ்சென்ற பரஞ்சோதி, கமலாதேவி ஆகியோரின் அன்புப் பேத்தியும், கருணாகரன் (ஜேர்மன்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), கணேஸ்வரன் (கண்ணன் கனடா), காலஞ்சென்ற மனோகரன், சிவகரன் (பிரான்ஸ்) ஜெயந்தினி, குகானந்தராஜா (குகன்), ஆகியோரின் பெறாமகளும், ரமணி (பிரான்ஸ்), மீரா (நீர்கொழும்பு), ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 4.08.2005 இன்று (வியாழக்கிழமை) அவரது இல்லத்திலிருந்து பி.ப 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு அனிஞ்சியன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:– சாந்தினி இராஜேஸ்வரன் (தாய்)
ஆசிரிய ஆலோசகர்,
துணுக்காய் கல்வி வலயம்.

(6011)



## WALK IN INTERVIEW

**solidar**
An INGO consortium induding NPA, SAH and ASB

Solidar is consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The solidar network in Sri Lanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

We are currently at the planning stagc for the Phase 3 Tsunami shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi./Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please walk in interview on Saturday, 6th August 2005 between 01.00 p.m and 5.30 p.m.

**Position: Office Manager**
At least 3-5 years experience in busy office environment.
Good communication skills in both English and Tamil would be essential.
Knowledge in IT skills preferred.

Proven experience in the following
- Organization of multiple departments
- Providing innovative solutions for offiec organization and management
- Managing staff (approx.40)
- Providing support and advise to all staff
- Facilitation communication discussuon between staff and departmentents.

Suitable candidates should be between 30-55 years of age.
Salary would depend on relevant skills and experience.

**Position: Head of Administration**
At least 2 years of experience in a similar role which should include the following.
Staff management and office organization, management of relevant database systems. Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel. PowerPoint and Access is a requirement.

**Position: Administrative officer**
Provide administrative support to the Head of Administration Duties will include maintenance of filing system, preparation of travel passes, arranging accommodation for guests, photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

Norwegian People's Aid
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH

**Solidar Office**
**156, Jaffna Road,**
**Paranthan.**

(சி-12476)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைகள் –2005

**கலைப்பீட, மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான கீழ்வரும்பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.**

1. முதலாம் வருட முதலாம் அரையாண்டு - கலை 15. 08. 2005
2. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு - கலை 25. 08. 2005
3. நான்காம் வருட முதலாம் அரையாண்டு - கலை 05. 09. 2005
4. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு - கலை 12. 09. 2005
5. மீள் பரீட்சைகள் (பழையபாடத்திட்டம் மற்றும் அரையாண்டு) -கலை மற்றும்இராமநாதன் நுண்கலைக்கழகம் -22. 08. 2005 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றன.

பதிவாளர்
27. 07. 2005

(சி.12398)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் நுண்கலைக்கழகம் பரீட்சைகள் –2005

**இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான கீழ்வரும் பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.**

1. முதலாம் வருட முதலாம் அரையாண்டு –செய்முறை சித்திரமும் வடிவமைப்பும் 22. 08. 2005
2. இரண்டாம்வருட முதலாம் அரையாண்டு–செய்முறை சித்திரமும் வடிவமைப்பும் 26. 08. 2005
3. முதலாம் வருட முதலாம் அரையாண்டு –செய்முறை இசை நடனம் 15. 08. 2005
4. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு–செய்முறை இசை 15. 08. 2005
5. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு–செய்முறை நடனம் 22. 08. 2005
6. முதலாம்,இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு--அறிமுறை இசை,நடனம், சித்திரமும் வடிவமைப்பும் 05. 09. 2005 இல் இருந்து.
7. மூன்றாம், நான்காம் வருட முதலாம் அரையாண்டு–அறிமுறை இசை,நடனம், சித்திரமும் வடிவமைப்பும் 22. 08. 2005 இல் இருந்து

பதிவாளர்
01. 08. 2005

(சி.12399)

## வணிகப்பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்

2006 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு பரீட்சையை இலக்காகக் கொண்ட மாணவர்களுக் கான துரிதமீட்டல், கடந்தகால மாதிரிவினாவிடை வகுப் புக்கள் ஆரம்பம்

வணிகக்கல்வி-T.வரதன் B.B.A (hons)
பொருளியல்-தி.திவ்விய ரூபன் (B.Com) (hons)
கணக்கீடு-V.யோகப்பிரகாஷ் B.B.A(F.M) (hons)

**காலம் :-06.08.2005 சனி பி.ப.3.00மணி**
இடம்:-சுடர்ஒளி கல்வி நிலையம் கரைச்சி உதவி அரசாங்க அலுவலர் அலுவலகம் அருகாமை கிளிநொச்சி.

(6516)

## புதிய உளவளத்துணையாளர்களை உள்வாங்குதல்

அன்னை இல்லம் தமது உளவளத்துணைச் செயற்பாடு களை மேலும் துரிதமாக்கும் வகையில் புதிய உளவளத் துணையாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**கவனத்திற்கு**

- வயதெல்லை 23–28 வரை இருத்தல்வேண்டும்.
- வன்னி பெருநிலப்பரப்பு மற்றும் வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளை நிரந்தர முகவரியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சுனாமி அனர்த்தப் பகுதிகளில் பணிசெய்யும் ஆர்வமுடையவராக இருப்பதுடன் சமூகத் தொண் டுகளில் ஆர்வமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த. (உ /த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் தொடர்புகளுக்கு:-

அன்னை இல்லம்,
உளவளத்துணை, உளவியல் அறிவூட்டும் நிறுவனம்,
87,கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 10.08.2005

(6514)


## நான்காம் ஆண்டு நினைவலைகள்...




### செல்வநாயகம் கவாஸ்கர்

அன்பிற்கு ஆண்பிள்ளை நீயென்று
பாசம் கொட்டியே வளர்த்தோம்
மழலை மொழி கேட்டு வளர்த்தோம்
ஆசை கொண்ட எமையெல்லாம்
மோசம் செய்து எங்கள் பாலகனை
காலனவன் கவர்ந்ததேனோ?
காலமகள் ஓடினாலும் கவாக்குட்டி
நீ எம் நினைவை விட்டு
ஓடமுடியாது.

129/1 விசுவமடு மேற்கு,
விசுவமடு. (6451)

தகவல்:-
செல்வநாயகம் குடும்பத்தினர்


## பணிநிலை வேண்டுகை

**பாண்டியன் வாணிபத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன**

- கணக்குப்பதிவாளர், காசாளர், களஞ்சியக்காப்பாளர், உணவு பரிமாறுநர்.
- அகவை:- பொதுவானவை -18-45 வரை.
- கணக்குப்பதிவாளர்:- ஆண், பெண் இருபாலாரும்.
- களஞ்சியக்காப்பாளர், காசாளர், உணவுபரிமாறுநர் :- ஆண்கள் மட்டும்.
- தகைமை:-
  - 01) கணக்குப்பதிவாளர் :- உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
  - 02) காசாளர், களஞ்சியக்காப்பாளர் :- சாதாரண தரத்தில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - 03) உணவு பரிமாறுநர்:- முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், சிங்களம்,ஆங்கிலம் உரையாடத் தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழுங்கப்படும் (உணவு ,தங்குமிட வசதி இலவசமாக வழுங்கப்படும்)
- மேல் உள்ள பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.
- கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு பிரதேசங்களில் வேலைவாய்ப்பு வழுங்கப்படும்.
- சம்பளம்:- நிதித்துறை சம்பளத்திட்டத்திற்கமைய.
- நேர்முகத் தேர்வு:-
  - 01) நாள் :- 05.08.2005 வெள்ளிக்கிழமை
  - 02) நேரம்:- காலை 10.00 மணி
  - 03) இடம்:- பாண்டியன் வாணிபம் நடுவப்பணிமனை வள்ளுவர்புரம் சந்தி (றெட்பானா சந்தி) விசுவமடு.
- நேர்முகத் தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
- கல்விச்சான்று, குடும்பப்பதிவு அட்டை, அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

ஆளுகை,
பாண்டியன் வாணிபம்,
நடுவப்பணிமனை.

(சி.12461)

## தமிழீழவைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களி டமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை** :- அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள்** :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் தொழில்நிர் வாகமாணி (BBA)/ வணிகமாணி (B.Com)/ விஞ்ஞானமாணி (B.Sc) பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப் படிப்பை (Diploma in Banking) நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 4,500+6,000**

**அகவை எல்லை :-** 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத்தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்.சாலை,கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழவைப்பக, நடுவப்பணியக, மனிதவளப்பகுதிக்கு, 11.08.2005 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு நேரில் வருகை தருமாறுவேண்டப்படுகின்றனர்.

01) கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02) ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04) நற்சாட்சிப் பத்திரங்கள்

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.12475)

## கொரிய சமாதான விளையாட்டுப்போட்டியில் புது.ம.வி. மாணவன் நிறஞ்சன் சாதனை

முல்லைத்தீவு மாவட்ட வீரரும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவனுமான சகாயரட்ணம் நிறஞ்சன் கொரியா சமாதான விளையாட்டுப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இந்த மாணவன் ஏற்கனவே அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினை வென்று முல்லை மாவட்ட அரசாங்க அதிபரினால் கௌரவிக்கப்பட்டு அன்பளிப்புப் பரிசாக ரூபா பத்தாயிரம் ரூபாவைப்பெற்றார். இந்த மாணவன் கொரியாவிலிருந்து நாளை - முல்லைத்தீவு வரவுள்ளார். (உ௦)

## வடக்கு-கிழக்கு மாகாணமட்ட தடகளப்போட்டி யாழ்ப்பாணம் பொதுவிளையாட்டு மைதானத்தில்

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தடகளப்போட்டி யாழ்ப்பாணம் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் மாவட்ட ரீதியில் வெற்றிபெற்ற வீரவீராங்கனைகள் பங்கு கொள்ளவுள்ளனர். இந்தப் போட்டி இம்மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் பங்குகொள்ளவிருக்கின்றனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து போட்டியில் பங்குபற்ற இருக்கும் வீரர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். (கீ)



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் மென்பந்து துடுப்பாட்டப்போட்டி யில் ஒரு காட்சி. (து)

## சமாதான கிண்ணத்திற்கான கால்பந்துப் போட்டி யாழ் மாவட்டம் பத்திரிசியார் கல்லூரியில்

சமாதான கிண்ணத்திற்கான பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இம்முறையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப் போட்டியில் ஏழு பாடசாலை அணிகள் பங்கு கொள்ளவுள்ளன. இந்த மாதம் 18, 19, 20, 25 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி இளவாலை புனித ஹென்றிஸ் கல்லூரி, மன்னார் சென் சேவியர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய கல்லூரி அணிகள் பங்கு கொள்ள வுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற சமாதான கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டி வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இந்த போட்டியில் புனித பத்திரி சியார் கல்லூரி சம்பியனானது குறிப்பிடத் தக்கது.

## இலங்கை அணியில் மற்றுமொரு தமிழ் வீரர்

இந்திய அணியுடனேற்று தம்புள்ளயில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் சார்பில் மற்றுமொரு புதிய தமிழ் வீரர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

பிரதீப் ஜெயபிரகாஸ்தரன் என்ற இந்த வீரர் றோயல் கல்லூரியின் மூலம் தமிழ் யூனியன் அணியில் பங்கேற்றுவருபவர்.

இவர் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த வராவார். இவர் கிரிக்கெட் அணியில் வலது துறை வேகப்பந்து வீச்சாளராகவும் வலது துறை துடுப்பாட்ட வீரருமாவார்.

## ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 10,000 ஓட்டங்களை கடந்தார் கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்கள் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றார்.

சிறிலங்காவில் நடைபெற்றுவரும் மும்முனை ஒருநாள் போட்டித் தொடரின் சிறிலங்காவுக்கு எதிரான தம்புள்ளயில் நடைபெற்ற போட்டியில் 51 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம் கங்குலி இப்பெருமையைப் பெற்றார்.

பத்தாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்ய 33 ஓட்டங்கள் தேவையான நிலையில் நான்கு ஒருநாள் போட்டித் தடைக்குப் பின்னர் நேற்று அணியில் இணைந்து கொண்ட கங்குலி 51 ஓட்டங்களைக் குவித்தார். இதன் மூலம் 10014 ஓட்டங்களை கங்குலி பெற்றுள்ளார்.இதன் மூலம் அவர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்ற மூன்றாவது வீராக இணைந்து கொண்டார்.ஏற்கனவே சச்சின் டெண்டுல்கர் மற்றும் இன்சமாம் உல்ஹக் ஆகியோர் இந்தச் சாதனையை ஏற் படுத்தியுள்ளனர்.

## ஜெயவர்த்தன-சந்தன அபார ஆட்டம் இந்தியாவுக்கு இரண்டாவது தோல்வி



சிறிலங்காவில் நடைபெற்று வரும் மும்முனை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியிலும் சிறிலங்கா அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் இரவு-பகலாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கங்குலி 51 ஓட்டங்களையும், கைப் 34 ஓட்டங் களையும், பதான் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் சகலதுறை வீரர் டில் சான் பத்து ஓவர் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.221 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிறிலங்கா ஆரம்பம் முதலே இந்தியப்பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாது தடுமாறியதுடன், 96 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்தது.

இந்த நிலையில் ஒருமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த மகேலஜெயவர்த்தன வுடன் இணைந்த சகலதுறை வீரர் உபுள் சந்தன கைகொடுக்க இருவரும் அபாரமாக ஆடி 48 ஆவது ஓவர் நிறைவில் இந்தியாவின் வெற்றிக் கனவைத் தகர்த்தனர்.

ஜெயவர்த்தன ஆட்டமிழக்காது 94 ஓட்டங்களையும் உபுள்சந்தன ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை விட அத்தப்பத்து 29 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் நெஹ்ரா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக ஜெயவர்த்தன தெரிவானார்.

## டெஸ்ட் கிரிக்கெட் வரிசை இந்திய அணிக்கு மூன்றாவது இடம்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அணிகள் வரிசைப்பட்டியலில் இந்திய அணி மூன்றாவது இடத்தில் உள்ளது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகளின் வரிசைப் பட்டியலை. சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது இதில் இந்திய அணி 111புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் வெற்றி பெற்றதன் மூலம் அவுஸ்திரேலியா 132 புள்ளியில் இருந்து 133புள்ளியைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து அணி 114 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப்பிடித்துள்ளது. தென் ஆபிரிக்க அணி ஆறாவது இடத்தில் இருந்து நான்காவது இடத்திற்குத் தாவியுள்ளது. அந்த அணி 100 புள்ளிகளுடன் உள்ளது. நான்காவது இடத்தில் இருந்த இலங்கை அணி ஆறாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இலங்கை தற்போது 98 புள்ளிகள் பெற்றுள்ளது.

99புள்ளிகளுடன் நியூசிலாந்து அணி ஐந்தாவது இடத்திலும், பாகிஸ்தான் (95 புள்ளி), ஏழாவது இடத்திலும், மேற்கிந்திய தீவு (74 புள்ளி) எட்டாவது இடத்திலும், சிம்பாப்வே (30 புள்ளி), ஒன்பதாவது இடத்திலும் வங்களாதேஷ் (ஆறு புள்ளி), பத்தாவது இடத்திலுமுள்ளன.


## ஆஷஸ் இரண்டாவது போட்டி இன்று வோகன் பங்கேற்பது சந்தேகம்



நேற்று முன்தினம் நடைபெற்ற பயிற்சியின்போது காயத்துக்குள்ளான இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோகன் இன்று ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய அணியுடனான ஆஷஸ்கிண்ண இரண்டாவது டெஸ்ட்டில் கலந்து கொள்வது சந்தேகமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சியின்போது கிறிஸ் ட்ரம்லட்டின் பந்து தோளில்பட்டதால் வோகன் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனால் மார்கஸ்ரெஸ் கொதிக் அணியை வழிநடத்துவார் என்றும் வோனுக்குப்பதிலாக றொப் கீ சேர்த்துக்கொள்ளப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ட்ரம்லட் குறிப்பிடும் போது இது மிகவும் வேதனைக்குரிய விடயம் என்றும் முதல்போட்டியில் சாதிக்காத வோகன் இப்போட்டியில் சாதிக்க நினைத்திருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



## லண்டனில் மேலும் குண்டு வெடித்தால் போட்டிகள் அச்சத்துக்குள்ளாகும்

மேலும் லண்டனில் குண்டு வெக்குமாயின் அது தற்போது நடைபெற்றுவரும் ஆஷஸ் கிண்ணக்கிரிக்கெட் போட்டிகளை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் என அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் ஜேசன் கிளெஸ்பி தெரிவித்துள்ளார்.

எனினும் அவ்வாறு நடப்பது சாதரணமான நிகழ்வு என்றும் இதனால் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை நிறைவேற்றதிகாரி போல் மார்ஷல் தெரிவித்துள்ளார்.


மேலும் ஒரு குண்டு வெடித்தாலும் அணிதாயகம் திரும்பிவிடும் எனத்தான் கருதுவதாகத் தெரிவித்த கிளெஸ்பி மற்றவர்களைப் பற்றிதான் குறிப்பிடாவிட்டாலும் தான் அவ்வாறு நம்புவதாகத் தெரிவிக்கிறார்.

## இந்திய வீரர் கங்குலி ஆத்திரம்



இம்மாத நடுப்பகுதியில் ஆபிரிக்காவில் நடைபெறும் ஆபிரிக்க அணிக்கெதிராக விளையாடும் ஆசிய அணியில் தன்னை இணைத்துக் கொள்ளாமையினால் இந்திய வீரர் கங்குலி ஆத்திரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தான் அண்மையில் நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் திறமை காட்டவில்லை என்பதை வைத்து யாருடைய தீர்மானமும் சரியாகுமா என அவர் வினாவியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தனது ஒரு நாள் போட்டிகள் ஓட்டங்கள் பெறுமதியானவை என்று தெரிவித்ததுடன் இன்சமாம் உல்ஹக்கை ஆசிய அணிக்குத் தலைவராக நியமித்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ளார்.அத்துடன் என்ன காரணத்துக்காகத்தான் ஒதுக்கப்பட்டார் என்பது தனக்குப் புரியவில்லை என்றார்.



## சிந்தனைக்கு

தேசவிடுதலை என்பது எல்லாரது விடுதலையையும் விடிவையும் குறித்து நிற்கும் ஒரு பொதுவான குறிக்கோள்; ஒரு தேசிய இலட்சியம். இந்த இலட்சியத்தில் எல்லாரும் பங்குகொள்ளும் பொழுதுதான் தமிழரின் சுதந்திர இயக்கம் வலுமிக்க சக்தியாக உருப் பெறும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## தேசத்துக்குப் பெருமை சேர்க்கும்---!

யுத்தநிறுத்த காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற வாய்ப்பினைப் பயன்படுத்தி பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் தமிழ் மாணவர்களும் தமது திறமையை வெளிக்காட்டி வருகின்றனர். அண்மையில், மாகாணமட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியிலான போட்டிகளில் அவர்களின் திறமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான யுத்தம், வளப்பற்றாக்குறை, வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாமை, பொருளாதார நெருக்கடி போன்ற பல்வேறு காரணங்களினால் தமிழ் பிரதேசங்களில் ஏனைய துறைகளைப் போன்றே விளையாட்டுத்துறையும் பெரிதும் நலிவடைந்த நிலையிலேயே உள்ளது. ஆயினும் இதனை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதற்கான முயற்சிகளில் பெரிதும் அக்கறை செலுத்தப்பட்டும் வருகின்றது.

சர்வதேச ரீதியில் இன்று விளையாட்டுத்துறையானது பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. நவீன தொழிநுட்பங்கள் புகுத்தப்பட்டு போட்டிகள் மிகவும் தரம் உயர்ந்தவையாகவும், விறுவிறுப்பூட்டும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, போட்டிகளுக்கும், போட்டியாளர்களுக்கும் பெரும் விளம்பரங்களும், பெறுமதி மிக்கதானதுமான பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுவில் விளையாட்டானது மாணவர்கள் உட்பட சகலருக்குமே உடல் , உளவளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுகின்றதென்பது அனுபவத்தின் பாற்பட்ட முடிவாகும். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளவும், பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதற்கும் இது பேருதவியாகவுள்ளது.

இது ஒரு புறமிருக்க விளையாட்டானது இன்று விளையாட்டு வீரர்களின் தேசியத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதாகவும், புகழ் தேடித்தருவதாகவும் உள்ளது. இன்று உலகில் எந்தவித முக்கியத்துவம் பெறாததும், அறியப்படாததுமான நாடுகளும் விளையாட்டின் மூலம் அறியப்பட்டவையாகவும், புகழ்பெற்றவையாகவும் மாற்றம் கண்டுள்ளன.

இன்று விளையாட்டுத்துறையானது பெரும் பணம் புழங்கும் துறையாகவும், நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடியதாகவும் வளர்ந்துள்ளதால் இதில் பங்குகொள்ளவும், வெற்றிபெறவும் அத்தகைய வாய்ப்புக்கள், சூழ்நிலைகள் தேவையாக இருத்தல் அவசியமானது என்றதொரு எண்ணப்பாடு உண்டு. அது ஓரளவு ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் உள்ளது.


ஆனால் இது முற்றிலும் ஏற்புடையதானதல்ல. ஏனெனில், ஏழ்மைப்பட்ட – வறுமைப்பட்ட நாடுகளில் இருந்தும் பல போட்டியாளர்கள் சர்வதேச அரங்கிற்கு வருகின்றனர். வெற்றியீட்டியுள்ளனர். தமக்கும், தமது நாட்டிற்குமே பெருமை தேடிக்கொடுத்துள்ளனர்.அவர்கள் தமது நாட்டுத் தேசியக் கொடியுடன் அரங்கை வலம் வருகையில் தேசமே அவர்களினால் பெருமை கொள்கின்றது.

இந்த வகையில் உலகில் வறுமைப்பட்ட நாடுகளாக அறியப்பட்ட எதியோப்பியா, கெனியா போன்ற ஆபிரிக்க நாடுகளும், கியூபா,பாபடோஸ், ஜமேக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் பட்டியலில் இடப்பட்ட நாடுகளும் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளன. இவற்றின் வெற்றிகளை [illegible] த வசதிபடைத்த நாட்டினாலும் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை.

ஆகையினால் செல்வம், வசதிகள் என்பவற்றைவிட விளையாட்டில் விடாமுயற்சியும், தீவிர பயிற்சியும், சாதனையாளர் ஆக வேண்டும் என்ற பேரார்வமுமே இத்துறையில் பெரும் சாதனைகளுக்கு அடிப்படையாகும். உலகின் புகழ்பூத்த விளையாட்டு வீரர்களில் பலர் அடிமட்டத்திலிருந்து வந்தவர்களே. ஏனெனில் அவர்களிடமே விடாமுயற்சியும், போராடும் குணமும் நிரம்பப் பெற்றிருக்கும்.

இந்த வகையில் தமிழ்ச்சிறார்களும், இளைஞர்களும் இத்துறையில் காட்டும் ஆர்வமானது தனிப்பட்ட ரீதியில் அவர்களுக்கும் பெருமை சேர்ப்பதாக மட்டுமல்ல, உலகில் தமிழ் தேசியததை அடையாளப்படுத்துவதற்கும், அதற்குப் பெருமை சேர்ப்பதற்கும் வழிசமைப்பதாக இருக்கும். இதற்கு வீரர்களின் விடா முயற்சியும், தன்னம்பிக்கையுமே அடிப்படையாக அமையக்கூடியதாகும்.

இதே சமயம், விளையாட்டு வீரர்களின் திறன், ஆற்றல் என்பன அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் ஒத்துழைப்பு வழங்கப்படுதல் வேண்டும். இதன் மூலம் அவர்களுக்குக் கொடுக்கப்படும் நம்பிக்கையும், ஒத்துழைப்பும் அவர்களைச் சாதனையாளர்களாக்கும். எமது தேசத்தின் கொடியையும் சர்வதேச ரீதியில் உயர்த்திப்பிடிக்க வாய்ப்பினைக் கொடுக்கும்.




# பாதுகாப்புக் கொள்கைகள் மாறுவதால் இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு

### ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஆதங்கம்

(கொழும்பு)

ஒவ்வொரு அரசாங்கமும் மாறுகையில் பாதுகாப்புக் கொள்கைகளும் மாறுவதால் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுவதாக சிறிலங்காவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஹிரான் ஹலங்கொட தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆழிப் பேரலைக்கு அப்பால் எனும் தலைப்பில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் உரையாற்றும்போது. ஒரு அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை கிழக்கிற்கு மட்டுப்படுத்துமாறு கூறுகிறது. மற்றைய அரசாங்கம் இராணுவத்தை கிழக்கிலிருந்து விலகி வடக்கில் நிலைகொள்ளுமாறு கூறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது இவ்வாறான செயற்பாடுகளால் இராணுவத்தைப் பாதிக்கும் வகையிலேயே நடந்துகொண்டுள்ளன. இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பிரச்சினை ஏற்படக் காரணம் பாதுகாப்புப்படை அரசியல் மயப்படுத்தப்பட்டு இருப்பதுவே எனத் தெரிவித்தார். இந்த நிலையில் கடந்த இரு தசாப்தங்களாக அரசாங்கங்களின் கனவுகளுக்கமையவே வீரர்கள் போர் புரிய வேண்டிவந்ததாகவும் குறிப்பிட்டார். இதனால் வீரர்களின் நிலை பலவீனமடைந்தது. 1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கையின் பின்னர் படையினர் முகாம்களில் முடக்கப்பட்டனர்.

1994 ஆம் ஆண்டு மீண்டும் அதே நிலையே ஏற்பட்டது. 2002 இல் மீண்டும் படைவீரர்கள் முகாம்களில் முடக்கப்பட்டனர். இவ்வாறான நிலையில் போர் புரிவது எப்படி? என்றும் பிரிகேடியர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பேராசிரியர் சுசந்த குணதிலக்க, முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிறில் ரணதுங்க, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.எம்.ஜி.பீகொட்டக தெனிய, ஜே.வி.பி.தலைவர் சோம வன்ச அமரசிங்க, அமைச்சர் தினேஸ குணவர்த்தன ஆகியோர் இந்தக் கருததரங்கில் கலந்து கொண்டனர். (32)

# சனாதிபதி பதவிக்காலத்தை அதிகரிக்க வர்த்தமானியில் மோசடி செய்ய அரசு முயற்சி!

### ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இரண்டாயிரமாம் ஆண்டு சந்திரிகா சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார் என கள்ளத்தனமாக அரச வர்த்தமானியில் அச்சிடுவதற்கு அரசாங்கம் தற்போது இரகசியமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபின் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்குப் பின் வேறு வர்த்தமானி அறிவித்தல்கள் அச்சிடப்படவில்லை. என அச்சக கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது இது சம்பந்தமாக அச்சக கூட்டுத்தாபனம் அச்சிடப்பட்ட சகல வர்த்தமானி அறிவித்தல்களைப் பிரதியாக்கம் செய்துள்ளது என்று தெரிவித்துள்ளது. ஆகவே 2000 ஆம் ஆண்டு சனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவில்லை என்றும். இது சம்பந்தமாக கள்ளத்தனமாக வர்த்தமானி அச்சிடுவதற்கு குழு ஒன்று முயற்சித்து வருவதாகவும், அப்படி அவர்கள் அச்சிட்டால் இது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சி கடும் நடவடிக்கை எடுக்கும் என முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

# மேர்வின் சில்வாவிற்கு எதிரான போராட்டத்தில் இ.தொ.கா வும் கைகோர்க்க தீர்மானம்

(கொழும்பு)

இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பாக பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்த கருத்துக் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதேவேளை எதிர் வரும எட்டாம் திகதி மலையக மக்கள் முன்னணி கொழும்பில் நடாத்தும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு கட்சி பேதம் இன்றி ஆதரவு வழங்கவுள்ளதாகவும் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தலைவருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில் தனது தலைமையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலந்துகொள்ளும் எனவும் தெரிவித்த ஆறுமுகன் தொண்டமான் இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சிபேதம் இன்றி ஏனையோரும் கலந்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை பிரதி அமைச்சர் மேர்வன் சில்வாவின் இந்திய வம்சாவழியினர் தொடர்பான கருத்து கண்டிக்கத்தக்கது என நுவரெலியா மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மலையக மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி சந்திரசேகரன் இது தொடர்பில் பேசியபோது பிரதி அமைச்சர் இந்திய வம்சாவழியினரைப் பற்றி மோசமாகப் பேசிவிட்டு ஊடகங்களில் மன்னிப்புக் கோருவதில் பயனில்லை எனத் தெரிவித்துள்ளார். இதனால் சனாதிபதி இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

## புதிய வானூர்தித்தளம்

(கொழும்பு)

சரித்திர வரலாற்றுப் புகழ்மிக்க சிகிரியா, தம்புள்ள பிரதேசங்களைப் பார்வையிட வரும் உல்லாசப் பயணிகளின் நலன்கருதிச் சர்வதேச வானூர்தித்தளம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.இதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக சிறிலங்காவின் உள்ளூராட்சி மாகாண சபைகளுக்கான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.தற்சமயம் வானூர்தித் தளத்துக்கான நிலம் கண்டறியப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரு ஒலிப்பதிவுக் கலையகங்கள் திறப்பு



புலிகளின் குரல் வானொலியில் மேஜர் திருமாறன், நாட்டுப்பற்றாளர் குலச்செல்வன் நினைவு ஒலிப்பதிவுக் கலையகங்கள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

புலிகளின் குரலின் நடுவப் பணியகத்தில் அமையப்பெற்ற இக் கலையகங்களின் திறப்பு நிகழ்வு முற்பகல் பத்து மணிக்கு புலிகளின் குரலின் துணைப்பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை தமிழீழ வானொலி இணைப்பாளர் திருமாறன், புலிகளின் குரலின் நிர்வாக இணைப்பாளர் இராஜேஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மேஜர் திருமாறன் நினைவுக் கலையகத்தின் பெயர்ப் பலகையினை மேஜர் திருமாறனின் சகோதரி றீனலோஜினியும் நாட்டுப் பற்றாளர் குலச்செல்வன் நினைவுக் கலையகத்தின் பெயர்ப்பலகையினை புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி. தவபாலனும் திரைநீக்கம் செய்துவைக்க கலையகங்களை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

# மருத்துவ சிகிச்சை

ஐக்கியராட்சியத்திலிருந்து வருகை தந்திருக்கும் பொது மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி இ.கௌரிபாலன் அவர்களும் பல்மருத்துவ நிபுணர் பேராசிரியர் அரியரட்ணம் அவர்களும் இன்று காலை ஒன்பது மணிமுதல் மாலை மூன்று மணிவரை பொன்னம் பலம் மருத்துவமனை கிளிநொச்சி யில் நோயாளர்களை பார்வையிடு வதுடன் பின்வரும் அதிவிசேட சத்திரசிகிச்சைகளையும் நடாத்தவுள் ளனர். பயன்பெற விரும்புவோர் இன்று கிளி.பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். வாய்ப்புண், வாய்எரிவு, வாய்சத்திரசிகிச்சை, அலகு நோய், முரசு வீக்கம், முரசு புண் சம்மந்தமான சிகிச்சைகள் இடம் பெறவுள்ளன என அறிவிக்கப் பட்டுள்ளது.

## கரு ஜெயசூரிய பிரதமர் வேட்பாளர்

(கொழும்பு)

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான கரு ஜெயசூரியவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவதென ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

# தமிழீழ தேசிய தொலைக்காட்சி தொடர்பகம் கிளி. யில் திறப்பு




(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தேசிய தொலைக்காட்சி தொடர்பகம் கிளிநொச்சி மத்தியகல்லூரிக்கு முன்பாக யாழ்.சாலை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொடர்பகம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை தமிழீழ தேசிய தொலைக்காட்சி பணிப்பாளர் கருணாகரன் ஏற்றி வைத்தார். பெயர்ப்பலகையினை நிதர்சனத்தை சேர்ந்த தவா திரைநீக்கம் செய்துவைக்க தொடர்பகத்தினை சின்னப்பு மாஸ்டர் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

மேற்படி தொடர்பகம் திறந்து வைக்கப்பட்டதன் நோக்கம் பற்றி அதன் பணிப்பாளர் தெரிவிக்கையில்; தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையினை மக்கள் பார்வையிடுவதற்கான மேலதிக ஆலோசனைகளை வழங்குவதற்கும், தொலைக்காட்சியைப் பார்வையிடுவதற்கான இலத்திரனியல் கருவிகளை பெற்றுக்கொள்ள ஏதுவான ஒரு சேவையாக இந்தத் தொடர்பகம் அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

(கு.தீ)

## உயர்...

சட்டத்திலுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டும் இங்கு திகதியைக் குறிப்பிடுவது தொடர்பாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் சனாதிபதியின் பதவிக்காலம் ஏதாவது ஒரு தினத்தில் முடிவடைகின்றதென்றால் அந்தத் தினத்தில் அந்தத் திகதிக்கு முன்பதான மாதத்தில் தேர்தலை நடத்த முடியாது அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரும் நடத்த முடியாது.

பதவிக்காலம் முடிவடைகின்ற ஒருமாதத்திற்கும் இரண்டு மாதத்திற்கும். இடைப்பட்ட காலத்தில் தேர்தலை நடத்த வேண்டும் வேட்பு மனுத்தாக்கலின் பின்னரே இந்தத் தேர்தலை நடத்த வேண்டும்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு நான்கு வாரங்கள் வரை தேர்தலை நடத்த முடியாது ஆறு வாரங்களுக்குப் பின்னரும் தேர்தலை நடத்த முடியாது.

எனவே அங்கும் கால வரையறை ஒன்று உள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டிய தினத்தில் இருந்து பதின்நான்கு நாட்களுக்குள்ளும் இருபத்தொரு தினங்களுக்கு இடையிலும் ,வேட்பு மனுத்தாக்கல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வேட்பு மனுத்தாக்கல் ஏற்றுக்கொள்ளப்பட்டு நான்கு வாரங்களுக்கும் ஆறுவாரங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் அந்தத் தினம் பதவிக் காலம் முடிவடையும் தினத் திற்கு ஒருமாதத்திற்கும் இரண்டு மாதத் திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் அமைதல் வேண்டும் என்றார்.

## போராளிகளின் பாதுகாப்பான..

மட்டும் உறுதிப்படுத்திய ஹெலன் அது குறித்து மேலதிக விபரம் எதனையும் தெரிவிக்க முற்றாக மறுத்து விட்டார்.

இதேநேரம் நேற்று முன்தினம் பிற்பகல் கூடிய கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் புலிகளின் பதில் கடிதத்திலுள்ள அம்சங்கள் குறித்து நீண்ட நேரம் விரிவாக ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போராளிகளின்...

மாற்று ஆயுதக்குழுவிடம் ஆயுதங்கள் இருப்பது தொடர்பாகவும் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு பிரகாரம் அவர்கள் ஆயுதத்துடன் இருப்பது போர் நிறுத்த உடன்படிக்கையை கேள்விக்குறியாக்கிவிடும் என்றும் ஞானம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஏற்கனவே ஒருமுறை ஞானம் முறைபாடு தெரிவித்து இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

மாற்று ஆயுதக்குழுவிடம் இருக்கும் ஆயுதங்கள் களையப்படுவதுடன் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுப்பட்டு இருக்கின்ற ஒவ்வொரு போராளிகளினதும் பாதுகாப்பும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ஞானம் கேட்டுள்ளார். ஆயுதங்களை களைவதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (21)

## தலைதுண்டிக்கப்பட்ட...

பாடசாலையின் பயன்படுத்தப்படாத பகுதி ஒன்றிலேயே இந்த சடலம் காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். சடலம் அடையாளம் காண்பதற்காக தற்சமயம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இந்து மெதடிஸ்த மத்தியகல்லூரி மட்டக்களப்பு நகரின் மையப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள சிறிலங்கா இராணுவ 223 பிரிகேட்டின் தலைமைச்செயலகத்திற்கு 50 மீற்றர் தூரத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2005இல்..

பதவியேற்றார் எனில் அரசியல் அமைப்பின்படி இந்த வருடம் அதாவது 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைகிறது.இந்த நிலையில் அரசாங்க அமைச்சர்கள் சிலர் 2006 ஆம் ஆண்டிலேயே சனாதிபதித்தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து வருவதை சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், இது தாம் உட்பட வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகத் தெரிவித்துள்ளார்.(32)

## செப்-1...

இந்தக் கலந்துரையடலில் 26 உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகிகளும், பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த எழுச்சி நாளை மிகவும் எழுச்சிகரமாக செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் அடுத்த கலந்துரையாடல் வரும் சனிக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மாலை இரண்டு மணிக்கு சகல வர்த்தக நிறுவன உரிமையாளர்களுக்கும் நடைபெற உள்ளது எனவும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அருள் கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை எழுச்சி நடவடிக்கை குழு தலைவர் தி. பிரபாகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள மக்கள் எழுச்சி நிகழ்வில் ஒரு இலட்சம் வரையான மக்களை அணிதிரட்டி சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப் படுத்தும் நிகழ்வாக மக்கள் எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது. (கு,தீ)

## சனாதிபதியின்...

கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில் அரசதரப்பால் முன்வைக்கப்படும் திருத்த யோசனைகள் குறித்து சனாதிபதி விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது. இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரசாங்கத்தின் சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் கலந்து கொள்வர் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. சனாதிபதியின் விசேட செய்தியுடன் வெள்ளிக்கிழமை வன்னி செல்லும் ஹெல்கேசன், தமிழீழ அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து, புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான அரசின் திருத்த யோசனைகள் குறித்து ஆலோசனை நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## அமெரிக்கா..

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் இந்தப் பிரச்சினை அதிகரித்துள்ளது.

சனாதிபதி தனது தனிப்பட்ட பிரச்சினைகள் இரண்டை தலையில் வைத்துக்கொண்டே இந்த விடயத்தை நோக்குகிறார். அவருக்குத் தேவையான வகையில் நிர்வாகத்தைக் கொண்டு செல்ல வேண்டுமாயின் நாடு ஸ்திரமற்ற நிலையில் இருக்க வேண்டும். அடுத்து பதவியை பிடிக்க வரும் தலைவரால் அந்தப் போட்டியில் வெல்ல முடியாத நிலையை ஏற்படுத்தவும் வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க அன்று செய்ததும் இதனையே. காமினி திஸாநாயக்க படுகொலை செய்யப் பட்டமைக்கும் இதுவே காரணம். உலகின் புதிய அடிப்படை வாதிகளின் ஆதரவு ரணில், சந்திரிகா இருவருக்குமே கிடைக்கிறது.

மகிந்தராஜபக்ஷ இவற்றை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக் கிறார்.

மேற்கத்தேய ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தேவை பிரிவினையே. விடுதலைப்புலிகளின் பயங்கரவாதமே. அவர்களுக்கு பிறிதொரு இராச்சியத்தை ஏற்படுத்திக் கொடுப்பதும், நாட்டின் வளங்களைச் சூறையாடுவதுமே அவர்களின் திட்டம். அவர்களுக்கு தேவை இலங்கையை கரைத்து அழிப்பதாகும். பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, கலாச்சார ரீதியாக அதனை அவர்கள் ஆற்றி வருகின்றனர்.

நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களையும் வழங்கு கிறது. எதிர்காலத்தில் கொழும்பு கோட்டைப் பகுதி முழுவதையும் வன்னியிலிருந்தவாறே வெடித்துச் சிதற வைக்கக் கூடிய தொழில் நுட்பங்கள் தற்போது புலிகளிடம் உள்ளன. அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கும் உதவிகளின் சிறியளவு தொடர்பான தகவல்களே வெளிவருகின்றன. சமாதானத்தின் பெயரால் நாட்டின் பாதுகாப்பு பலியிடப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.


## 6ஆம் ஆண்டு நினைவுடன்...

தாயின் மடியில் 04 - 06 - 1977



தாயக மண்ணில் 20 - 06 - 1999

### மேஜர் தமிழ்ச்செல்வன்

(ரூபசிங்கம் ராதாரமணன்)
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
மலரும் ஈழத்தில்
மாண்புமிகு நாயகனாய்
வீரத்தின் விதையாகி
வரலாறாய் நிலைத்தவனே
நீங்காது உன் நினைவுகள்
என்றென்றும் எம் நெஞ்சில்.

No.83AB
திருநகர், கிளிநொச்சி.

(6408)

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்,


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.